# INDIAN POLITY

# GROUP 1&II PRELIMS WEEKLY TEST - 4

## நாடாளுமன்றம் Parliament
## (பகுதி V, பிரிவுகள் 79 – 122)

- நாடாளுமன்றம் என்பது ஒன்றிய சட்டமன்றம் அல்லது தேசியச் சட்டமன்றம் என்று அழைக்கப்படுகிறது.

- இ∴து இந்திய மக்களாட்சி அமைப்பின் மையமாக அமைந்துள்ளது.

- வெஸ்ட் மினிஸ்டர் மாதிரி அரசாங்கம் (West Minister Model of Government) என்றும் அழைக்கப்படுகிறது.

- பிரிட்டீஸ் நாடாளுமன்றம் வெஸ்ட்மினிஸ்டர் என்ற இடத்தில் அமைந்துள்ளது. இந்த இடம் இங்கிலாந்து நாடாளுமன்றத்தி அடையாளமாகப் பார்க்கப்படுகிறது.

**நாடாளுமன்றத்தின் அமைப்பு (Organisation of Parliament):**

- இந்திய நாடாளுமன்றம் என்பது குடியரசுத்தலைவர், மக்கள் அவை, மாநிலங்கள் அவை ஆகியவற்றை உள்ளடக்கியது.

- 1954ல் லோக் சபா, இராஜ்ய சபா என்ற இந்தி சொற்களுக்குப் பதிலாக, மக்கள் அவை, மாநிலங்கள் அவை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டன.

- லோக் சபா (Lok Sabha) என்பது, முதல் அவை அல்லது மக்கள் அவை அல்லது கீழ் அவை என அழைக்கப்படுகிறது.

- இராஜ்ய சபா (Rajya Sabha) என்பது, மேல் அவை அல்லது இரண்டாவது அவை அல்லது அறிஞர்கள் அவை என்றும் அழைக்கப்படுகிறது.

- நமது நாடாளுமன்றம், இங்கிலாந்து நாடாளுமன்றத்தை ஒத்துள்ளது.

- இங்கிலாந்து நாடாளுமன்றம் என்பது, அரசன் அல்லது அரசி, பொது அவை (House of commons) என்கிற கீழ் அவை மற்றும் பிரபுக்கள் அவை என்கிற மேல் அவை (House of Lards) ஆகியவற்றை உள்ளடக்கியது.

- அமெரிக்க நாடாளுமன்றம், காங்கிரஸ் (Congress) என அழைக்கப்படுகிறது. இதில் பிரதிநிதிகள் அவை என்ற கீழ் அவையும், செனட் (Senate) என்கிற மேல் அவையும் உண்டு.

- அமெரிக்காவில், அதிபர் (President), நாடாளுமன்றத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இருப்பதில்லை.

- மக்கள் அவை இந்திய மக்களை ஒரு முழு அமைப்பாகப் பிரதிபலிக்கிறது.

- மாநிலங்கள் அவை, மாநிலங்கள் மற்றும் ஒன்றிய பிரதேசங்களின் பிரதிபலிப்பாக உள்ளது.

- குடியரசுத் தலைவர், நாடாளுமன்றத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளார்.

- குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இல்லாமல் எந்த மசோதாவும் சட்டமாக முடியாது.

- அதேபோல், குடியரசுத் தலைவர், அவையைக் கூட்டுகிறார் அல்லது ஒத்திவைக்கிறார். மக்களவையைக் கலைக்கின்றார், இரண்டு அவைகளிலும் உரையாற்றுகின்றார் மற்றும் அவசரச் சட்டங்களை இயற்றுகின்றார்.

- நாடாளுமன்ற முறையிலான அரசாங்கத்தில், சட்டமன்றம் மற்றும் நிர்வாகத் துறையாகவும் ஒன்றையொன்று சார்ந்து செயல்படுகின்றன.

- அதிபர் அமைப்பிலான அரசாங்கத்தில், இவ்விரண்டும் பிரிக்கப்பட்டு உள்ளன.

**மக்களவை (Lok Sabha)**

- மக்கள் அவையில் அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 552 (530 – மாநிலங்கள், 20 – ஒன்றியப் பிரதேசங்கள், 2 – ஆங்கிலோ இந்தியர்கள்).

- தற்போது 545 உறுப்பினர்கள் (530 – மாநிலங்கள், 13 – ஒன்றியப் பிரதேசங்கள், 2 – ஆங்கிலோ இந்தியர்கள்)

- ஆங்கிலோ இந்தியர்களுக்கு ஒதுக்கப்பட்ட 2 இடங்கள், தற்போது ரத்து செய்யப்பட்டு உள்ளது (126 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 2019)

- உறுப்பினர்கள், மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

- மக்கள் தொகை அடிப்படையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகிறது.

- ஒவ்வொரு மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்குப் பின்னர், தொகுதிகள் மறுவரையறை செய்யப்படுகின்றன.

- இது தொடர்பாக நாடாளுமன்றம் 1952, 1962, 1972 மற்றும் 2002 – ஆம் ஆண்டுகளில் மறுசீரமைப்பு ஆணையச் சட்டங்களை (Delimitation commission Acts) இயற்றியுள்ளது.

- 1976 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 42வது திருத்தச் சட்டம், தொகுதிகளின் எண்ணிக்கை, எல்லைகள் யாவும் 1971 ஆம் ஆண்டின் மக்கள் தொகை அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படும் மற்றும் இது 2000 ஆம் ஆண்டுவரை தொடரும் என்று தெரிவித்தது.

- மேலும், இது 2026 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டது (84வது அரசியலமைப்புச் திருத்தச் சட்டம், 2001).

- பின்னர், 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகள் மறுவரையறை செய்யச் சட்டம் இயற்றப்பட்டது. (87வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 2003).

- தாழ்த்தப்பட்ட, பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. தற்போது, இது மேலும் பத்தாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது (126வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 2019).

- மக்கள் அவையின் பதவிக்காலம் 5 ஆண்டுகள், அதற்கு முன்பு குடியசுத் தலைவரால் கலைக்க முடியும்.

- தேசிய அவசர நிலைப் பிரகடனத்தின்போது அவையின் காலத்தை ஓராண்டு நீட்டிக்கலாம். ஆனால் அந்தப் பிரகடனம்ட முடிவிற்கு வந்த பின்னர், 6 மாதங்களுக்கு மேல் நீட்டிக்க முடியாது.

- இதுபோக, இந்திய பிரதிநிதித்துவச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டடுள்ள (1951) கருத்துக்களையும் பெற்றிருக்க வேண்டும்.

- ஐந்தாவது மக்கள் அவையின் காலம், ஓராண்டிற்கு நீட்டிக்கப்பட்டது (18 மார்ச், 1976 – 18 மார்ச் 1977), பின்னர், மேலும் ஓராண்டுற்கு (18 மார்ச், 1978) நீட்டிக்கப்பட்டது. ஆனால், அவை ஜனவரி 18, 1977 அன்று கலைக்கப்பட்டது.

- உறுப்பினர் ஆவதற்கு 25 வயது முடிந்திருக்க வேண்டும். நாடாளுமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட பிற தகுதிகளையும் பெற்றிருக்க வேண்டும்.

- ஏதாவது ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் வாக்காளராக இருக்க வேண்டும்.

**மாநிலங்கள் அவை (Rajya Sabha)**

- மாநிலங்களவையில் மொத்த இடங்கள் 250 (238 – மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள், 12 – குடியரசுத் தலைவரால் நியமனம்).

- தற்போது உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 245. (229 – மாநிலங்கள், 4- ஒன்றியப் பிரதேசங்கள், 12 – குடியரசுத் தலைவரால் நியமனம்).

- அரசியலமைப்பின் நான்காவது அட்டவணை, மாநிலங்களுக்கு இடங்களை ஒதுக்கீடு செய்வது பற்றிக் கூறுகிறது.

- மாநிலங்கள் அவை என்பது நிரந்தரமான அவை. அதைக் கலைக்க முடியாது.

- உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகள், மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள், 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஓய்வு பெறுகின்றனர்.

- ஓய்வுபெறும் நபர்கள் எத்தனை முறை வேண்டுமானாலும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம்.

- சட்டமன்ற உறுப்பினர்களால் விகிதாச்சார ஒற்றை மாற்று வாக்கு (Proportional representation by means of the single transferable vote) அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றனர்.

- மக்கள் தொகை அடிப்படையில் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகிறது (உத்திரப் பிரதேசம் - 31. திரிபுரா – 1)

- அமெரிக்காவில் செனட் அவையில் (Senate House) அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டு உள்ளது.

- புதுடெல்லி மற்றும் புதுச்சேரி ஒன்றியப் பிரதேசங்கள் மட்டும் பிரதிநிதிகளை மாநிலங்கள் அவைக்கு அனுப்புகின்றன.

- பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களில், 12 நபர்களைக் குடியரசுத் தலைவர் நியமனம் செய்யலாம்.

- உறுப்பினராவதற்கு, இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். 30 வயது பூர்த்தி அடைந்து இருக்க வேண்டும் மற்றும் நாடாளுமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட பிற தகுதிகளையும் பெற்றிருக்க வேண்டும்.

- ஏதாவது ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் வாக்காளராக இருக்க வேண்டும்.

- இதுபோக, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் (1951) தெரிவிக்கப்பட்டுள்ள தகுதிகளையும் பெற்றிருக்க வேண்டும்.

**தகுதி நீக்கம்**

கீழ்க்கண்ட காரணங்களுக்காக எந்த ஓர் உறுப்பினரும் தகுதி நீக்கம் செய்யப்படலாம்

1. மத்திய அல்லது மாநில அரசாங்கத்தின் ஆதாயம் தரும் பதவியில் இருந்தால்
2. நல்ல மநிலையில் இல்லாதவராக இருத்தல்
3. திவாலானவாக இருததால்
4. இந்தியகி குடிமகனாக இல்லாமல் அல்லது அயல்நாட்டுக் குடியுரிமையைத் தானே முன்வந்து பெற்றிருந்தால்
5. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தினால் தகுதி நீக்கம் செய்யப்பட்டிருந்தால்

**மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் (1951) தெரிவிக்கப்பட்டுள்ள கூடுதல் தகுதிநீக்க விபரங்கள்**

1. தேர்தல் குற்றத்திற்காகவோ அல்லது ஊழல் குற்றத்திற்காகவோ தண்டனை பெற்றிருத்தல் கூடாது.
2. எந்த ஒரு குற்றத்திற்காகவும் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றிருக்கக் கூடாது. இது தடுப்பு காவலுக்கு பொருந்தாது.
3. தேர்தல் செலவினக் கணக்குகள் சமர்ப்பிக்கப்படாமல் இருத்தல் கூடாது.
4. ஊழல் செயலுக்காக அரசுப்பணியிலிருந்து நீக்கப்பட்டிருக்கக் கூடாது
5. இனக் குழுக்களுக்கிடையே வன்மத்தைத் தூண்டியதற்காகத் தண்டனை பெற்றிருக்கக் கூடாது.
6. தீண்டாமை, வரதட்சணை மற்றும் சதி போன்ற சமூகக் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டிருத்தல் கூடாது.
7. தகுதி நீக்கம் செய்வதில், குடியரசுத் தலைவரின் முடிவு இறுதியானது, ஆனால், தகுதி நீக்கம் செய்வதற்கு முன்பு, தேர்தல் ஆணையத்துடன் கலந்தாலோசிக்கப் பட்டிருக்க வேண்டும்.

### கட்சித் தாவல் சட்டத்தின்படி நீக்கப்படுதல் (Disqualification on Ground of Defection)

- தானாகவே கட்சி உறுப்பினர் பதவியைக் கைவிட நினைத்தால்
- கட்சியின் உத்தரவுக்கு எதிராக அவையில் வாக்கு அளித்தால்
- நியமன உறுப்பினர் பதவியேற்ற 6 மாத காலத்திற்குப் பின்பு கட்சியில் சேர்ந்தால்.
- உறுப்பினர்களைத் தகுதி நீக்கம் செய்யும் அதிகாரம் மக்களவைத் தலைவருக்கும், மாநிலங்களவைத் தலைவருக்கும் உண்டு. இவர்களின் முடிவு நீதிப்புனராய்வுக்கு உட்பட்டது.

## இரட்டை உறுப்பினர் (Double Membership)

- ஒரே உறுப்பினர் இரு அவைகளிலும் உறுப்பினராகத் தொடரமுடியாது. ஓர் உறுப்பினர் இரண்டு அவைகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், எந்த அவையில் அவர் தொடர விரும்புகிறார் என்பதைப் 10 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும். இல்லையெனில் மாநிலங்களவை உறுப்பினர் பதவி ரத்தாகிவிடும்.

- தற்போது அவையில் உறுப்பினராக உள்ள ஒருவர், மற்றொரு அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், ஏற்கனவே அவர் வகித்துவந்த உறுப்பினர் பதவி ரத்தாகிவிடும்.

- ஓர் அவைக்கு இரண்டு இடங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், எந்த இடத்தை அவர் தக்கவைத்துக்கொள்ள விரும்புகிறார் என்பதைத் தெரிவிக்க வேண்டும். இல்லையெனில், இரண்டு இடங்களும் காலியாக இருப்பதாக அறிவிக்கப்படும்.

- ஒருவர் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டால் 14 நாட்களுக்குள் சட்டமன்றப் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும். இல்லையெனில், நாடாளுமன்ற உறுப்பினர் பதிவ ரத்தாகிவிடும்.

- எந்த ஒரு முன்னறிவிப்பும் இன்றி அவைக்கு 60 நாட்கள் வரவில்லை என்றால். பதவி காலியாகிவிடும்.

- நீதிமன்றத்தின் மூலமோ அல்லது அவையின் மூலமோ கூட நீக்கப்படலாம். தகுதியற்ற நபர் ஒருவர் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டிருந்தால், பாதிக்கப்பட்ட நபர் அதை எதிர்த்து உயர் நிதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கலாம்.

- பதவி விலகினால், பதவி விலகல் கடிதத்தை மக்கள் அவை தலைவருக்கோ அல்லது மாநிலங்கள் அவை தலைவருக்கோ அனுப்ப வேண்டும். ஆனால் பதவி விலகல் என்பது சுய விருப்பத்தின் (Voluntarily) அடிப்படையில் இருக்க வேண்டும்.

## உறுதிமொழி (Oath or Affirmation)

- குடியரசுத் தலைவர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர் முன்பு உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும்.

- உறுப்பினராக இல்லாமல், அதற்கான இருக்கையில் அமர்ந்தாலோ அல்லது வாக்களித்தாலோ, அவருக்கு ஒரு நாளைக்கு ரூ 500 வீதம் அபராதம் விதிக்கப்படும்.

**ஊதியம் மற்றும் படிகள்**

- நாடாளுமன்றத்தால் நிர்ணயிக்கப்படும் ஊதியம் மற்றும் பிற படிகளைப் பெறுகின்றனர்.

- 1976 ஆம் ஆண்டு முதல் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், ஓய்வூதியம் குறித்து அரசியலமைப்பில் ஏதும் சொல்லப்படவில்லை.

- இதுபோக, பயணச் சலுகை, இலவச வீடு, தொலைபேசி, வாகனம் வாங்க முன்பணம், மருத்துவ வசதி போன்றவற்றைப் பெறத் தகுதியுடைவர்கள்.

- மக்களவைத் தலைவர் மற்றும் மாநிலங்களவைத் தலைவருக்கான ஊதியம்யாவும் இந்திய குவிப்பு நிதியிலிருந்து (Consolidated fund of India) வழங்கப்படுகிறது. இதை நாடாளுமன்றத்தின் வாக்கெடுப்பிற்கு உட்படுத்த முடியாது.

**மக்களவைத் தலைவர் (Speaker)**

- இவர் மக்களவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.

- அவையில் உறுப்பினராக இல்லாதவர், மக்களவைத் தலைவராகச் செயல்பட முடியாது.

- மக்களவை கலைக்கப்பட்டாலும், புதிய அவை பதவியேற்கும் வரை பதவியில் தொடர்வார்.

- பதவி விலகல் கடிதத்தை மக்களவைத் துணைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும்.

- மக்களவையில் நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் மூலம் இவர் நீக்கப்படலாம். ஆனால், அதற்கு முன்பு 14 நாட்கள் முன்னறிவிப்பு கொடுக்க வேண்டும்.

- தனக்கு எதிரான பதவி நீக்க தீர்மானத்தின்போது, அவையை நடத்த இயலாது. ஆனால் விவாதத்தில் பங்குபெற்று வாக்களிக்கலாம்.

**அதிகாரங்கள் மற்றும் பணிகள் (Powers and Functions)**

- மக்களவையின் தலைவர் மற்றும் அதனுடைய பிரதிநிதி.

- அவையின் தலைமைப் பேச்சாளர்.

- எந்த ஒரு பொருளின் மீதும் இவர் அளிக்கும் விளக்கம் இறுதியானது.

- அவையின் கண்ணியத்தைக் காக்கின்றார்.

- அவையை ஒத்திவைக்கும் அதிகாரம் இவருக்கு உண்டு.

- சம நிலையில் வாக்கு அளிக்கின்றார்.

- கலப்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குகிறார்.

- உறுப்பினர்களின் அதிகாரங்கள் மற்றும் விருப்பங்களின் பாதுகாவலர்.

- அவைத் தலைவர் கேட்டுக்கொண்டால், அவையை இரகசியமாக நடத்தும் அதிகாரம் இவருக்கு உண்டு.

- ஒரு மசோதா, பண மசோதாவா அல்லது இல்லையா என்பது குறித்துத் தீர்மானிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார்.

- அதேபோல், பணமசோதாவை மாநிலங்களையின் ஒப்புதலுக்கோ அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கோ அனுப்பும்போது, இது பண மசோதாதான் என்று சான்று அளிக்கின்றார்.

- அனைத்துச் சட்டப்பேரவைத் தலைவர்களுக்கும் தலைவராக உள்ளார்.

- நாடாளுமன்றக் குழுக்களுக்கான தலைவர்களை நியமனம் செய்கின்றார். அவர்களின் பணிகளை மேற்பார்வை செய்கின்றார்.

- அலுவலக ஆலோசனைக் குழு, விதிகள் குழு மற்றும் பொது நோக்கத்திற்கான குழுவிற்குத் தலைவராகச் செயல்படுகின்றார்.

- இந்திய நாடாளுமன்றக் குழுவின் பதவி வழி தலைவராகச் செயல்படுகிறார்.

- இதன் மூலம் இந்திய நாடாளுமன்றம் மற்றும் உலக நாடாளுமன்றங்களுக்கு இணைப்புப் பாலமாக உள்ளார்.

- கட்சித் தாவல் சட்டத்தின்படி மக்களவை உறுப்பினர்களைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் இவருக்கு உண்டு. ஆனால் இவரது முடிவு நீதிப்புனராய்விற்கு உட்பட்டது என்று உச்சநீதிமன்றம் (1992) கூறியுள்ளது.

**மக்களவைத் தலைவரின் சுதந்திரமான மற்றும் பாகுபாடற்றத் தன்மையை உறுதிப்படுத்தும் காரணிகள்**

- மக்களவைத் தலைவரின் பதவிக்காலம் வரையறுக்கப்பட்டது.

- அவையின் முழு பெரும்பான்மை (Absolute Majority) மூலம் மட்டுமே பதவி நீக்கம் செய்ய முடியும்.

- ஊதியம் மற்றும் படிகள் யாவும் இந்தியக் குவிப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

- இவரின் செயல் மற்றும் பணிகளை பற்றி விவாதிக்க இயலாது.

- அவையை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் நிதிமன்றத்திற்கு கட்டுப்பட்டதன்று

- பொதுவாக அவையில் வாக்களிப்பதில்லை. சமநிலையில் மட்டுமே வாக்களிக்கின்றார்.

- மரபு பட்டியலில் (Order of Proceeding) 7-வது இடத்தில் உள்ளார்.

- இங்கிலாந்தில், அவைத் தலைவர் பதவியேற்றவுடன், கட்சியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்கிறார். அந்த மரபு, இந்தியாவில் பின்பற்றப்படுவதில்லை.

**மக்களவைத் துணைத் தலைவர்**

- மக்களவை உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படுகின்றார்.

- அவையில் உறுப்பினராக இருக்கும் வரை பதவியில் தொடர்வார்

- பதவி விலகல் கடிதத்தை, மக்களவைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும்.

- மக்களவைத் தலைவர் இல்லாதபோது, அவரது பணிகளை மேற்கொள்வார்.

- இவர், மக்களைத் தலைவருக்குக் கீழான நிலையில் இல்லை. நேரடியாக அவைக்குப் பொறுப்பானவர்.

- ஒரு நாடாளுமன்றக் குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டால், அதன் தலைவராகச் செயல்பட இவருக்கு உரிமை உண்டு.

- மக்களவைத் தலைவர் உள்ளபோது, இவர் சாதாரண உறுப்பினர்தான்.

- இவருக்கான ஊதியம், இந்தியக் குவிப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

- 10வது மக்களவை வரை, மக்களவைத் தலைவர் பதவி மக்களவைத் துணைத் தலைவர் பதவிகளில் ஆளுங்கட்சியினரே அங்கம் வகித்தனர்.

- 11வது மக்களவை முதல், மக்களவைத் தலைவர் பதவி ஆளுங்கட்சிக்கும், மக்களவைத் துணைத் தலைவர் பதவி எதிர்கட்சிக்கும் வழங்கப்படுகிறது.

- இவ்விருவரும், இதற்கெனத் தனியாக உறுதிமொழி ஏதும் எடுத்துகொள்ளமாட்டார்கள்.

- மக்களவைச் சட்டத்தின் கீழ், மக்களவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் இல்லாதபோது, மக்களவையை நடத்துவதற்கு 10 நபர்கள் கொண்ட ஒரு பட்டியலை மக்களவைத் தலைவர் உருவாக்குவார்.

- மக்களவைத் தலைவருக்கு உள்ள அதிகாரங்கள் இவர்களுக்கும் உண்டு.

- மக்களவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் பதவிகள் காலியாக உள்ளபோது, இப்பட்டியலில் உள்ளவர்கள் செயல்பட முடியாது. அச்சமயத்தில், குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்பட்டவர் அவையை நடத்துவர்.

**பிற தகவல்கள்**

- 1919 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத்தின்படி, 1921 ஆம் அண்டு மக்களவைத் தலைவர் மற்றும் மக்களவைத் துணைத் தலைவர் பதவி உருவானது.
- 1921 ஆம் ஆண்டுக்கு முன்புவரை, மத்திய சட்டமன்ற அவையின் (Central Legislative Council) தலைவராகக் கவர்னர் ஜெனரல் இருந்தார்.
- 1921 ஆம் ஆண்டு பிரடிரிக் ஒயிட் (Frederik White) மற்றும் சச்சிதானந்த சின்கா ஆகியோர் முதல் அவைத் தலைவர் மற்றும் முதல் அவைத் துணைத் தலைவராக நியமனம் செய்யப்பட்டனர்.
- 1925 ஆம் ஆண்டு மத்தியச் சட்டமன்றத்தின் முதல் இந்தியச் சட்டமன்றத் தலைவராக வித்தல்பாய் படேல் நியமிக்கப்பட்டார்.
- இடைக்கால சட்டமன்றத்தின் தலைவராக ஜி.வி. மாவலங்கர் மற்றும் துணைத் தலைவராக ஆனந்த சயனம் அய்யங்கார் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.
- ஜி.வி. மாவலங்கர் அரசியலமைப்பு நிர்ணயச் சபையின் தலைவராகவும் பணியாற்றினார். சுதந்திர இந்தியாவின் முதல் மக்களவைத் தலைவர், இவர்தான் 1946 – 1956 வரை பதவியில் இருந்தார்.

**தற்காலிக மக்களவைத் தலைவர் (Speaker Proterm)**

- புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களவை உறுப்பினர்களுக்கு உறுதிமொழி செய்து வைப்பதற்காகக் குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகிறார்.
- பொதுவாக, அவையின் மூத்த உறுப்பினர் தேர்வு செய்யப்பட்டு, அவருக்குக் குடியசுரத் தலைாவர் பதவிப் பிரமாணம் செய்துவைப்பார். பின்னர், இவர் மற்ற உறுப்பினர்களுக்கு செய்துவைப்பார்.
- மக்களவையின் முதல் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கின்றார்.
- புதிய மக்களவைத் தலைவர் தேர்வு செய்யப்படுவதற்கு உதவி செய்வார்.
- இவரது பதவிக்காலம் தற்காலிகமானது.

**மாநிலங்களவையின் தலைவர் (Chairman of Rajya Sabha)**

- துணை குடியரசுத் தலைவர்தான் மாநிலங்களவையின் தலைவர்.
- இவர், குடியரசுத் தலைவராகப் பணியாற்றும்போது, அவைக்குத் தலைவராகச் செயல்பட முடியாது.
- பணிகள், அதிகாரங்கள் யாவும் மக்களவைத் தலைவருக்கு உரியது போன்றது.

- இவர் எந்த அவையிலும் உறுப்பினராக இல்லை.
- அவையில் கொண்டுவரப்படும் தீர்மானத்தின் மூலம் இவரைப் பதவி நீக்கம் செய்யலாம்.
- பதவி நீக்கத் தீர்மானத்தின்போது அவையை நடத்த முடியாது. ஆனால் விவாதங்களில் பங்கு பெறலாம். வாக்களிக்க முடியாது (மக்கள் அவைத் தலைவர், தனக்கு எதிரான தீர்மானத்தின் மீது வாக்களிப்பார்).
- ஊதியம் மற்றும் இதர படிகள் இந்தியக் குவிப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது
- குடியரசுத் தலைவராகச் செயல்படும்போது, அதற்குரிய ஊதியத்தைப் பெறுகின்றார்.

**மாநிலங்களவைத் துணைத் தலைவர் (Deputy Chairman of Rajya Sabha)**

- மாநிலங்களவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.
- அவைத் தலைவர் இல்லாதபோது, அவரது பணிகளை மேற்கொள்வார்.
- இவர், மாநிலங்களவையின் தலைவருக்குக் கீழ் நிலையில் உள்ளவர் அல்லர். நேரடியாக அவைக்குப் பொறுப்பானவர்.
- சம நிலை ஏற்படும்போது வாக்கு அளிக்கின்றார்.
- பதவி விலகல் கடிதத்தை மாநிலங்களவைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும்.
- மாநிலங்களவையில் கொண்டுவரப்படும் தீர்மானத்தின் மூலம் பதவி நீக்கம் செய்ய முடியும்.
- ஊதியம் மற்றும் இதரப் படிகள் யாவும் இந்தியக் குவிப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.
- அவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் இல்லாதபோது, அவையை நடத்துவதற்கு என ஒரு பட்டியல் (A Panel of Vice – Chairpersons) தயாரிக்கப்படும். இதில் உள்ளவர்கள் அவைத் தலைவராகச் செயல்படுவர்.
- ஆனால், அவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் பதவிகள் காலியாக உள்ளபோது இவர்கள் செயல்பட முடியாது. அப்போது, குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுபவர் அவையை நடத்துவார்.

**நாடாளுமன்றச் செயலகம் (Secretariat of Parliament)**

- நாடாளுமன்றத்தின் ஒவ்வோர் அவைக்கும் தனித்தனியாக அலுவலர்கள் உண்டு.
- இதுபோக, பொதுவாகச் சில அலுவலர்களும் உண்டு.

- இவர்களுடைய பணிகள்யாவும் நாடாளுமன்றத்தால் வரைமுறைப்படுத்தப்படுகின்றன.

- ஒவ்வொரு அவையின் செயலகத்திற்குச் செயலாளர் ஜெனரல் (Secretary General) என்பவர் தலைமை வகிக்கின்றார்.

- இப்பதவி நிரந்தரமானது, அவைத் தலைவரால் நியமனம் செய்யப்படுகின்றார்.

**அவைத்தலைவர் (Leader of House)**

- மக்களவை விதிகளின்படி அவைத்தலைவர் என்பவர் பிரதமர் ஆவார். ஆனால், அவர் மக்களவையில் உறுப்பினராக இருக்க வேண்டும் அல்லது மக்களவையில் உறுப்பினராக உள்ள அமைச்சரை அவைத் தலைவராகப் பிரதமர் நியமனம் செய்யலாம்.

- அதேபோல், மாநிலங்கள் அவையிலும் அவைத்தலைவர் இருப்பார். இவர் மாநிலங்களவையில் உறுப்பினராக உள்ள ஒரு அமைச்சர். இவரைப் பிரதமர் நியமனம் செய்கிறார்.

- அமெரிக்காவில் அவைத்தலைவர் என்ற பதவி பெரும்பான்மைத் தலைவர் (Majority Leader) என அழைக்கப்படுகிறார்.

**எதிர்கட்சித் தலைவர் (Leader of Opposition)**

- ஒவ்வொரு அவையிலும் எதிர்கட்சித் தலைவர் ஒருவர் இருப்பார்.

- அவையின் மொத்த உறுப்பினர்களில் 1/10 பங்கிற்குக் குறையாமல் உறுப்பினர்களை பெற்ற கட்சி பெரிய எதிர்கட்சியாக கருதப்படும்.

- மக்களாட்சி அமைப்பில் இவரது பங்கு முக்கியத்துவம் பெறுகின்றது.

- அரசாங்கத்தின் கொள்கைகளை ஆரோக்கியமான முறையில் விமர்சனம் செய்வதுடன் மாற்று அரசாங்கத்தை (Alternative Government) ஏற்படுத்தவும் முயல்கின்றார்.

- 1961-ஆம் ஆண்டில்தான் முதன் முதலாக இப்பதவி அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், 1977-ல் இதற்குச் சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டது.

- ஒரு கேபினெட் அமைச்சருக்கு உரிய அனைத்துச் சலுகைகளும் இவருக்கு உண்டு. அமெரிக்காவில், எதிர்கட்சித் தலைவர் என்பவர் சிறுபான்மை தலைவர் (Minority Leader) என அழைக்கப்படுகிறார்.

- இங்கிலாந்தில் நிழற் அமைச்சரவை (Shadow Cabinet) என்ற அமைப்பு உள்ளது.

- ஆளும் அமைச்சரவையில் உள்ள ஒவ்வொரு அமைச்சருக்கும் ஒரு நிழற் அமைச்சர் இருப்பார். இது மாற்று அமைச்சரவையாக (Alternative Cabinet) செயல்படுகின்றது.

- ஐவர் ஜென்னிங்ஸ் - எதிர்கட்சித் தலைவர் என்பவர் மாற்றுப் பிரதமர் ஆவார்.

- அவைத் தலைவர் மற்றும் எதிர்கட்சித் தலைவர் பதவிகள் பற்றி அரசியலமைப்பில் ஏதும் சொல்லப்படவில்லை.

- ஆனால், அவைத்தலைவர் பற்றி அவை விதிகளிலும். எதிர்கட்சித் தலைவர் பற்றி நாடாளுமன்ற சட்டத்திலும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

### நாடாளுமன்றச் செயலகம் (Secretariat of Parliament)

- நாடாளுமன்றத்தின் ஒவ்வோர் அவைக்கும் தனித்தனியாக அலுவலர்கள் உண்டு.

- இதுபோக, பொதுவாகச் சில அலுவலர்களும் உண்டு.

- இவர்களுடைய பணிகள் யாவும் நாடாளுமன்றத்தால் வரைமுறைப்படுத்தப்படுகின்றன.

- ஒவ்வொரு அவையின் செயலகத்திற்குச் செயலாளர் ஜெனரல் (Secretary General) என்பவர் தலைமை வகிக்கின்றார்.

- இப்பதவி நிரந்தரமானது, அவைத் தலைவரால் நியமனம் செய்யப்படுகின்றார்.

### அவைத்தலைவர் (Leader of House)

- மக்களவை விதிகளின்படி அவைத்தலைவர் என்பவர் பிரதமர் ஆவார். ஆனால், அவர் மக்களவையில் உறுப்பினராக இருக்க வேண்டும் அல்லது மக்களவையில் உறுப்பினராக உள்ள அமைச்சரை அவைத் தலைவராகப் பிரதமர் நியமனம் செய்யலாம்.

- அதேபோல், மாநிலங்கள் அவையிலும் அவைத்தலைவர் இருப்பார். இவர் மாநிலங்களவையில் உறுப்பினராக உள்ள ஒரு அமைச்சர். இவரைப் பிரதமர் நியமனம் செய்கிறார்.

- அமெரிக்காவில் அவைத்தலைவர் என்ற பதவி பெரும்பான்மைத் தலைவர் (Majority Leader) என அழைக்கப்படுகிறார்.

### எதிர்கட்சித் தலைவர் (Leader or Opposition)

- ஒவ்வொரு அவையிலும் எதிர்கட்சித் தலைவர் ஒருவர் இருப்பார்.
- அவையின் மொத்த உறுப்பினர்களில் 1/10 பங்கிற்குக் குறையாமல் உறுப்பினர்களை பெற்ற கட்சி பெரிய எதிர்கட்சியாக கருதப்படும்.
- மக்களாட்சி அமைப்பில் இவரது பங்கு முக்கியத்துவம் பெறுகின்றது.

- அரசாங்கத்தின் கொள்கைகளை ஆரோக்கியமான முறையில் விமர்சனம் செய்வதுடன் மாற்று அரசாங்கத்தை (Alternative Government) ஏற்படுத்தவும் முயல்கின்றார்.
- 1961-ஆம் ஆண்டில்தான் முதன் முதலாக இப்பதவி அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், 1977-ல் இதற்குச் சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- ஒரு கேபினெட் அமைச்சருக்கு உரிய அனைத்துச் சலுகைகளும் இவருக்கு உண்டு.
- அமெரிக்காவில், எதிர்கட்சித் தலைவர் என்பவர் சிறுபான்மை தலைவர் (Minority Leader) என அழைக்கப்படுகிறார்.
- இங்கிலாந்தில் நிழற் அமைச்சரவை (Shadow Cabinet) என்ற அமைப்பு உள்ளது.
- ஆளும் அமைச்சரவையில் உள்ள ஒவ்வொரு அமைச்சருக்கும் ஒரு நிழற் அமைச்சர் இருப்பார். இது மாற்று அமைச்சரவையாக (Alternative Cabinet) செயல்படுகின்றது.
- ஐவர் ஜென்னிங்ஸ் - எதிர்கட்சித் தலைவர் என்பவர் மாற்றுப் பிரதமர் ஆவார்.
- அவைத் தலைவர் மற்றும் எதிர்கட்சித் தலைவர் பதவிகள் பற்றி அரசியலமைப்பில் ஏதும் சொல்லப்படவில்லை.
- ஆனால், அவைத்தலைவர் பற்றி அவை விதிகளிலும். எதிர்க்கட்சித் தலைவர் பற்றி நாடாளுமன்ற சட்டத்திலும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**கொறடா (Whip)**

- இப்பதவி அரசியலமைப்பிலோ அல்லது அவை விதிகளிலோ அல்லது நாடாளுமன்ற சட்டத்திலோ சொல்லப்படவில்லை.
- நாடாளுமன்ற அரசாங்க வழக்கத்தின்படி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் நாடாளுமன்றத்தில் கொறடா உண்டு.
- நாடாளுமன்றத்தில் கட்சியின் தலைவருக்கு உதவி புரிவதற்காக நியமிக்கப்படுகின்றார்.
- அவரது கட்சி உறுப்பினர்களை ஒழுங்குபடுத்துகின்றார்.
- உறுப்பினர்கள் கொறடா உத்தரவுப்படி நடக்க வேண்டும். இல்லையெனில் கட்சி உரிய நடவடிக்கை எடுக்கும்.

**நாடாளுமன்ற கூட்டத்தொடர் (sessions of Parliament)**
**அவையை கூட்டுவதற்கு அழைப்பு விடுத்தல் (Summoning)**

- நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையையும் கூட்டுவதற்குக் குடியரசுத் தலைவர் அழைப்புவிடுகின்றார்.
- இரண்டு கூட்டத்தொடருக்கு இடைப்பட்ட காலம் 6 மாதத்திற்கு மேல் இருக்கக் கூடாது. அதாவது, அவை ஆண்டுக்கு இருமுறை கூடவேண்டும்.
- பொதுவாக அவை ஆண்டுக்கு மூன்று முறை கூடுகின்றது.
  1. பட்ஜெட் கூட்டத்தொடர் - பிப்ரவரி முதல் - மார்ச் வரை
  2. மழைக்கால கூட்டத்தொடர் - சூலை முதல் - செப்டம்பர் வரை
  3. குளிர்க்கால கூட்டத்தொடர் - நவம்பர் முதல் - டிசம்பர் வரை

**அவையை ஒத்திவைத்தல் (Adjournment)**

- அவையின் பணிகளைக் குறிப்பிட்ட காலத்திற்கு அதாவது குறிப்பிட்ட சில மணி நேரங்கள், நாட்கள் அல்லது வாரங்களுக்கு ஒத்திவைக்கும் செயல்.

**தேதி குறிப்பிடாமல் அவையை ஒத்திவைத்தல்**

- அவை மீண்டும் கூடுவதற்குத் தேதி ஏதும் குறிப்பிடாமல் ஒத்திவைப்பது
- ஒத்திவைப்பது அல்லது தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பது என்பது அவை தலைவருக்கு உள்ள அதிகாரம்

- தேவைப்பட்டால், அந்த ஒத்திவைத்த காலத்திற்குள் அவையை மீண்டும் கூட்டும் அதிகாரம் அவைத்தலைவருக்கு உண்டு.

**கூட்டத்தொடரை முடித்துவைத்தல் (Prorogation)**

- குடியரசுத் தலைவர்தான் அவையின் கூட்டத்தொடரை முடித்து வைக்கின்றார். இதனால் அவையில் அறிமுகப்படுத்தப்பட்ட மசோதாவிற்குப் பாதிப்பு ஏதும் இல்லை.

- ஆனால், அவையில் கொடுக்கப்பட்ட நோட்டிஸ் யாவும் செயலற்றதாகிவிடும். அடுத்த கூட்டத்தொடரின்போது புது நோட்டிஸ்தான் வழங்க வேண்டும்.

- இங்கிலாந்தில் கூட்டத்தொடரை முடித்துவைப்பது மூலம் மசோதாக்கள் முடிவுக்கு வருகின்றன.

**அவையை கலைத்தல் (Dissolution):**

- மக்களவையை மட்டுமே கலைக்க முடியும், மாநிலங்கள் அவையைக் கலைக்க முடியாது.

- மக்களவையின் ஆயுட்காலம் 5 ஆண்டுகள், காலம் முடிந்தவுடன் அவை தானாகவே கலைப்பிற்கு வந்துவிடும்.

- குடியரசுத்தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும் அவையைக் கலைக்கலாம்.

**மக்களவை கலைக்கப்பட்டால்**

1. அதே அவையில் உள்ள மசோதா முடிவிற்கு வந்ததாக (Lapser) கருதப்படும்.
2. மக்களவையில் நிறைவேற்றப்பட்டு, மாநிலங்களவையில் நிலுவையில் உள்ள மசோதா முடிவு பெற்றுவிடும்.
3. கலப்புக் கூட்டத்தொடரை எதிர்நோக்கியுள்ள மசோதா ரத்தாகாது.
4. மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டு மக்களவைக்கு அனுப்பப்பட்ட மசோதா முடிவடையாது.
5. குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக உள்ள மசோதா ரத்தாகாது.

6. குடியரசுத் தலைவரால் அவையின் மறுபரிசீலனைக்கு அனுப்பப்பட்ட மசோதா ரத்தாகாது

### குறைந்தபட்ச உறுப்பினர்கள் (Quorum)

- அவையின் மொத்த உறுப்பினர்களில் 1∴10 பங்கு உறுப்பினர்கள் இருந்தால் மட்டுமே அவையை நடத்த முடியும். இந்த எண்ணிக்கையில் அவைத் தலைவரும் அடங்குவார்.
- அதாவது அவையை நடத்துவதற்கு மக்களவையில் 55 உறுப்பினர்களும், மாநிலங்களவையில் 25 உறுப்பினர்களும் இருக்க வேண்டும்.
- குறைந்தபட்ச உறுப்பினர்கள் இல்லாதபோது அவையை ஒத்திவைப்பதா அல்லது அவைக் கூட்டத்தை நிறுத்திவைப்பதா என்பது அவைத்தலைவரின் உரிமையாகும்.

### அவையில் வாக்களித்தல் (Voting in house)

- அனைத்து விவாதங்களும் வாக்கெடுப்பிற்கு அனுமதிக்கப்பட்டு பெரும்பான்மை அடிப்படையில் முடிவு செய்யப்படுகின்றன.
- அரசியலமைப்புத் திருத்தம், குடியரசுத்தலைவரை நீக்குதல் போன்றவற்றிற்கு மட்டும் சிறப்புப் பெரும்பான்மை தேவை, மற்றவற்றிற்கெல்லாம் சாதாரண பெரும்பான்மையே போதும்.
- அவைத்தலைவர் சமநிலையில் இருக்கும்போதுதான் வாக்கு அளிக்கின்றார்.

### நாடாளுமன்ற மொழி (Language in Parliament)

- இந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் விவாதம் நடத்துவதற்கு அரசியலமைப்பு அங்கீகாரம் அளிக்கிறது. ஆனால், உறுப்பினர்கள் தாய் மொழியில் பேசுவதற்கு அனுமதிக்கலாம்.

### அமைச்சர்கள் மற்றும் தலைமை வழக்கறிஞரின் உரிமைகள்

- மக்களவை உறுப்பினரான ஒரு அமைச்சர் மாநிலங்க அவையிலும் பேசலாம்.
- அதேபோல், மாநிலங்களவை உறுப்பினரான ஒரு அமைச்சர் மக்களவையிலும் பேசலாம்.
- ஆனால், வாக்கெடுப்பு நடைபெறும் போது எங்கு உறுப்பினர்களக உள்ளனரே அங்குதான் வாக்கு அளிக்க வேண்டும்.
- எந்த அவையிலும் உறுப்பினராக இல்லாத அமைச்சர் கூட இரு அவைகளில் நடைபெறும் விவாதங்களில் பங்கேற்கலாம் (உறுப்பினராக இல்லாத அமைச்சர் 6 மாதங்களுக்குள் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட வேண்டும்).

### முடவாத்து தொடர் (Lame – Duck session)

- மக்களவை புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு, பழைய மக்களவையின் கடைசி கூட்டத்தொடர்.

- புதிய மக்களவைக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்படாத பழைய மக்களவை உறுப்பினர்கள் முடகாத்துக்கள் (Lame Ducks) என அழைக்கப்படுகின்றனர்.

## கேள்வி நேரம் (Question Hour)

- நாடாளுமன்ற கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் கேள்வி நேரமாக இருக்கும்.

- இதில் உறுப்பினர்கள் கேள்விகளைக் கேட்க அமைச்சர்கள் பதில் அளிப்பார்கள்.

**கேள்விகள் மூன்று வகைப்படும்**

1. **உடுக்குறியிட்ட வினா**
    - இவ்வினாவில் நட்சத்திர குறியீடு (Asterisk) குறிப்பிடப்பட்டிருக்கும்.
    - இக்கேள்விக்கு வாய்மொழியாகப் பதில் அளிக்க வேண்டும்.
    - துணைக்கேள்விகள் கேட்கலாம்.
    - பதிலுரை பச்சை வண்ணத்தில் அச்சிடப்பட வேண்டும்.

2. **உடுக்குறியிடாத வினா**
    - இவ்வகை வினாவிற்கு எழுத்துப்பூர்வமாக பதில் அளிக்க வேண்டும்.
    - துணைக் கேள்விகள் கேட்க இயலாது.
    - பதிலுரை வெள்ளை வண்ணத்தில் அச்சிடப்பட வேண்டும்.

3. **குறுகிய கால வினா**
    - 10 நாட்கள் கால அவகாசம் கொடுத்து இக்கேள்வி எழுப்ப வேண்டும்.
    - வாய்மொழியாகப் பதில் அளிக்கலாம்.
    - பதிலுரை இளஞ்சிவப்பு வண்ணத்தில் அச்சிடப்பட வேண்டும்

**தனி நபர்களுக்கு எதிரான வினா**

- அமைச்சர்கள் தவிர்த்து, தனி நபர்களுக்கு எதிராகவும் கேள்வி கேட்கலாம்.

- அமைச்சர்களுக்கு எதிராக கேட்கப்படும் வினாக்களுக்குப் பின்பற்றப்படும் நடைமுறைகள் இதற்கும் பொருந்தும்.

- பதிலுரை மஞ்சள் வண்ணத்தில் அச்சிடப்பட வேண்டும்.

## நேரமில்லா நேரம் (Zero Hour)

- நாடாளுமன்ற விதிமுறைகளில் சொல்லப்படவில்லை

- முன்னறிப்பு இன்றிக் கேள்வி கேட்க உறுப்பினர்களுக்கு இது உதவுகின்றது.

- கேள்வி நேரம் முடிந்தவுடன் இது தொடங்கும், அன்றைய நிகழ்ச்சி நிரல் (Agenda) தொடங்கும் வரை நடைபெறும்.

- இது ஒரு இந்திய கண்டுபிடிப்பாகும், 1962 முதல் பின்பற்றப்பட்டுவருகிறது.

**தீர்மானங்கள் (Motions)**

- எந்த ஒர தீர்மானமும் அவைத்தலைவரின் ஒப்புதலோடு விவாதிக்கப்பட்டு, வாக்கெடுப்பிற்கு உட்படுத்தப்பட்டு, முடிவெடுக்கப்படுகிறது.

**முடித்துவைக்கும் தீர்மானங்கள் (Closure Motions)**

- ஒரு பொருளின் மீதான விவாதத்தைக் குறைக்கும் விதமாகக் கொண்டு வரப்படும் தீர்மானம்.

- இந்தத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், விவாதம் நிறுத்தப்பட்டு உடனே வாக்கெடுப்பு நடத்தப்படும்.

**இதில் நான்கு வகைகள் உள்ளன**

1. **எளிய நடைமுறையில் முடித்துவைத்தல் (Simple Closure)**

   ஒரு பொருளைப் பற்றி போதுமான அளவில் விவாதிக்கப்பட்டுவிட்டது. வாக்கெடுப்பிற்கு அனுமதியுங்கள் என்று உறுப்பினர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.

2. **பகுதிகளாகப் பிரித்து முடித்து வைத்தல் (Closure by Compartments)**
   மசோதா அல்லது விவாதிக்கப்படும் பொருள் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு, வாக்கெடுப்பிற்கு உட்படுத்தப்படும்.

3. **தாவிக் குதித்து முடித்தல் (Gangaroo Closure)**
   மசோதாவின் முக்கியமான பகுதிகள் மட்டும் விவாதித்து, வாக்கெடுப்பிற்கு அனுமதிக்கப்படும், மற்ற பகுதிகள் விவாதிக்கப்படாமல் விடப்படும்

4. **வெட்டும் முறையில் முடித்தல் (Guillotine Closure)**
   ஒதுக்கப்பட்ட நேரம் முடிவடையும் நிலையில் ஒரு மசோதாவின் விவாதிக்கப்படாத பகுதிகளும். விவாதிக்கப்பட்ட பகுதிகளோடு வாக்கெடுப்பிற்கு அனுமதிப்பது.

**உரிமை மீறல் தீர்மானம் (Previllage Motion)**

- அமைச்சருக்கு எதிராக உறுப்பினர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்

- அவைக்குத் தவறான தகவல் அளித்தற்காகவோ அல்லது சொல்லாமல் மறைத்தற்காகவோ, அமைச்சரைக் கண்டிக்கும் விதமாகக் கொண்டுவரப்படுகிறது.

**கவன ஈர்ப்பு தீர்மானம் (Calling Attention Motion)**

- பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனையில் அமைச்சரின் கவனத்தை ஈர்ப்பதற்காக உறுப்பினர்களால் கொண்டுவரப்படுகிறது.

- அதிகாரப்பூர்வமான பதிலைப் பெறுவது

- இதுவும் இந்திய கண்டுபிடிப்பு, ஆனால் அவை விதிகளில் சொல்லப்பட்டுள்ளது.

- 1954 முதல் செயல்பாட்டில் உள்ளது.

**ஒத்திவைப்புத் தீர்மானம் (Adjournment Motion)**

- அவசரமான மக்கள் பிரச்சனையில் அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக இத்தீர்மானம் கொண்டுவரப்படுகிறது.

- இத்தீர்மானத்திற்கு 50 உறுப்பினர்களின் ஆதரவு தேவை

- இது அவையின் அலுவல்களைப் பாதிப்பதால் அரிதாகத்தான் பயன்படுத்த அனுமதிக்கப்படும்.

- இறுதியில் அரசுக்கு எதிராக கண்டனம் பதிவு செய்யப்படுகிறது. எனவே, மாநிலங்களவையில் இதை அனுமதிப்பதில்லை.

- ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீதான விவாதம் 2 மணி, 30 நிமிடங்களுக்குக் குறைவில்லாமல் நடைபெறும்.

**நம்பிக்கையில்லாத் தீர்மானம் (No confidence Motion)**

- இத்தீர்மானம் கொண்டுவருவதற்கு 50 உறுப்பினர்களின் ஆதரவு தேவை

- தீர்மானம் கொண்டுவருவதற்கான காரணங்களைச் சொல்ல வேண்டியதில்லை.

- அமைச்சரவை மக்கள் அவையின் நம்பிக்கையைப் பெற்றுள்ளதா என்று அறியப்படுகிறது.

- தீர்மானம் வெற்றிபெற்றால் அமைச்சரவை பதவி விலக வேண்டும்

**கண்டன தீர்மானம் (Censure Motion)**

- தீர்மானம் கொண்டுவருவதற்கான காரணங்களைத் தெரிவிக்க வேண்டும்.

- தனிப்பட்ட அமைச்சர் அல்லது அமைச்சரவைக்கு எதிராகக் கொண்டுவரலாம்.

- ஒரு குறிப்பிட்ட அரசின் கொள்கையில் கண்டனம் தெரிவிப்பதற்காகக் கொண்டுவரப்படுகிறது.

- அவையில் நிறைவேற்றப்பட்டால் அமைச்சரவை பதவி விலகவேண்டியதில்லை.

### நன்றி தெரிவிக்கும் தீர்மானம் (Motion of Thanks)

- பொதுத்தேர்தல் முடிந்தபிறகு தொடங்கும் முதல் கூட்டத்திலும் மற்றும் ஆண்டின் முதல் கூட்டத்திலும் குடியரசுத் தலைவர் உரையாற்றுவார்.
- அந்த உரையில் கடந்த ஆண்டு மற்றும் நடப்பாண்டின் திட்டங்கள் குறித்துப் பேசுவார்.
- அவரின் உரைக்கு நன்றி தெரிவிப்பதற்காக இத்தீர்மானம் கொண்டுவரப்படுகிறது. தீர்மானம் வாக்கெடுப்பிற்கு உட்படுத்தப்படும்.
- இது இங்கிலாந்தில் மன்னர் உரை நிகழ்த்தும் (Speech from Throne in Britain) ஒப்பிடப்படுகிறது.
- அரசாங்கத்தின் நிர்வாக தோல்விகள் மற்றும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட உறுப்பினர்களுக்கு ஒரு வாய்ப்பாக அமைகிறது.

### நாள் குறிப்பிடப்படாத தீர்மானம் (No Day yet – Named Motion)

- இந்தத் தீர்மானம் அவைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால், விவாதிக்கப்படும் நாள் குறித்துக் குறிப்பிடப்படுவதில்லை.
- அலுவல் ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின்படி விவாதத்திற்கான நாள் குறிப்பிடப்படும்.

### முறைப்படுத்துதல் (Point of order)

- அவை நிகழ்ச்சிகள் விதிமுறைகளின்படி நடைபெறாமல் திசைமாறிச் சென்றால் எந்த உறுப்பினரும் இதைக் கொண்டுவரலாம்.
- பொதுவாக அரசாங்கத்தைச் கட்டுப்படுத்துவதற்காக எதிர்கட்சி உறுப்பினர்களால் கொண்டுவரப்படுகிறது.

### அரை மணி நேர விவாதம் (Half – an – hour Discussion)

- பொது முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு விவாதம் நடத்த அனுமதிக்கப்படுகிறது.
- இதற்காக வாரத்தில் மூன்று நாட்களை ஒதுக்கிவைப்பார் அவைத்தலைவர்
- தீர்மான நிறைவேற்றம் மற்றும் வாக்கெடுப்பு ஏதும் நடைபெறுவதில்லை

### குறுகிய கால விவாதம் (Short Duration Discussion)

- இது இரண்டு மணி நேரம் விவாதம் என்றும் அழைக்கப்படுகிறது.

- கால அளவு 2 மணி நேரத்திற்கு மேல் மிகுதல் கூடாது

- பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகள் குறித்து விவாதிக்க உறுப்பினர்கள் இதை எழுப்புவார்கள்.

- அவைத்தலைவர் வாரத்தில் இரண்டு நாட்களை இதற்கென ஒதுக்குவார்.

- இதன் இறுதியில் வாக்கெடுப்பு ஏதும் நடைபெறுவதில்லை.

- 1953-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டில் உள்ளது.

**சிறப்பு முறையீடு (Special Mention):**

- மேற்கண்ட அவையின் எந்த விதிகளிலும் விவாதிக்கப்பட முடியாததை மாநிலங்கள் அவையில் சிறப்பு முறையீட்டின் மூலம் விவாதிக்கலாம்.

- இதேபோன்று விதி 377-ன் கீழ் மக்கள் அவையில் 'அறிவிப்பு' (Notics) என்ற முறையில் விவாதிக்கலாம்.

**தீர்மானங்கள் (Resolutions)**

- பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளில் அவை அல்லது அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கு உறுப்பினர்கள் தீர்மானங்களைக் கொண்டுவரலாம்.

- தீர்மானத்தின் மீது தொடர்புள்ளது மட்டுமே விவாதிக்க வேண்டும்.

**மூன்று வகைப்படும்**

1. **தனிநபர் தீர்மானம் (Private Members Resolution)**

    - தனி நபர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்

    - ஒரு வெள்ளிக்கிழமை விட்டு அடுத்த வெள்ளிக்கிழமை (Altemate Friday) மாலை நேர அமர்வில் விவாதிக்கப்படும்.

2. **அரசாங்கத் தீர்மானம் (Government Resolution)**
    - அமைச்சரால் கொண்டுவரப்படும் தீர்மானம்
    - திங்கள் - வியாழன், எந்த நாளிலும் விவாதத்தைத் தொடங்கலாம்.

3. **சட்டப்பூர்வமான தீர்மானம் (Statutory Resolution)**
    - தனிநபர் அல்லது அமைச்சரால் கொண்டுவரப்படும் தீர்மானம்
    - நாடாளுமன்றச் சட்டம் அல்லது அரசியலமைப்புத் தொடர்பானவை இதில் அடங்குவதால் இப்பெயரைப் பெறுகின்றது.

**இளைஞர் நாடாளுமன்றம் (Youth Parliament)**

- நான்காவது அகில இந்திய கொறடா (Whip) மாநாட்டின் பரிந்துரையின் அடிப்படையில் இத்திட்டம் கொண்டுவரப்பட்டது.

**நோக்கங்கள்**

- இளைஞர்களுக்கு நாடாளுமன்ற விதிமுறைகளைப் பழக்கப்படுத்துதல்
- இளைஞர்களிடையே ஒழுக்கம் மற்றும் சகிப்புத் தன்மையை வளர்த்தல்.
- மக்களாட்சியின் அடிப்படை தத்துவத்தை இளைஞர்கள் மனதில் பதிய வைத்தல்
- இந்தத் திட்டம் செயல்படுத்துவதற்குத் தேவையான உதவிகளை நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் செய்து தருகின்றார்.

**நாடாளுமன்ற நடைமுறைகள் (Legislative Procedure in Parliament)**

- அவை நடைமுறைகள் யாவும் இரு அவைகளுக்கும் பொதுவானவை.
- ஒவ்வொரு மசோதாவும் அவையில் ஒரே மாதிரியான நிலைகளில் கடந்த செல்லவேண்டும்.
- அவையின் ஒப்புதலைப் பெற்ற மசோதாதான் சட்டமாக மாறும்.
- நான்கு வகையன மசோதாக்கள் நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்படுகின்றன.
  1. சாதாரண மசோதாக்கள் (Ordinary Bills)
  2. பண மசோதாக்கள் (Money Bills)
  3. நிதி மசோதாக்கள் (Financial Bills)
  4. அரசியலமைப்புத் திருத்த மசோதாக்கள் (Constitution Amendment Bills)

**சாதாரண மசோதாக்கள்**

ஒவ்வொரு சாதாரண மசோதாவும் 5 நிலைகளைக் கடந்து செல்ல வேண்டும்.

1. **முதல் வாசிப்பு (First Reading)**

   - சாதாரண மசோதா நாடாளுமன்றத்தின் எந்த அவையிலும் அறிமுகப்படுத்தலாம்.
   - அமைச்சர் அல்லது தனிநபர் அறிமுகப்படுத்தலாம்.
   - அவையின் அனுமதியைப் பெற்று மசோதா தாக்கல் செய்யப்பட வேண்டும்
   - அனுமதி கிடைத்தவுடன், மசோதாவின் தலைப்பு மற்றும் குறிக்கோள் ஆகியவற்றை அறிமுகம் செய்பவர் வாசிப்பார்.
   - இந்த நிலையில் விவாதம் ஏதும் நடைபெறுவதில்லை.
   - மசோதா ஏற்கனவே அரசிதழில் வெளியிடப்பட்டு இருந்தால் அவையின் அனுமதியைப் பெறத் தேவையில்லை.
   - மசோதா அறிமுகம் மற்றும் அரசிதழில் வெளியிடுதல் யாவும் முதல் வாசிப்பில் அடங்கும்.

2. **இரண்டாவது வாசிப்பு (Second Reading)**
   - மசோதா விரிவான பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறது.
   - இதில் மூன்று துணை நிலைகள் உள்ளன.

   1. **பொதுவான விவாத நிலை (Stage of General Discussion)**

- அச்சடிக்கப்பட்ட பிரதிகள் யாவும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன.
- மசோதாவின் கோட்பாடு பொதுவாக விவாதிக்கப்படுகிறது.
- இந்த நிலையில் அவை மசோதாவின் மீது நான்கு முடிவுகளை எடுக்கலாம்.
  1. மசோதாவின் மீது விவாதத்தை உடனடியாகத் தொடங்கலாம் அல்லது இதற்கென ஒரு நாளை ஒதுக்கலாம்.
  2. மசோதாவை அவையின் தேர்வுக் குழுவிற்கு அனுப்பலாம்.
  3. மசோதாவை இரு அவைகளின் துணை குழுவிற்கு அனுப்பலாம்
  4. பொது மக்களின் கருத்திற்காக மசோதாவைச் சுற்றனுப்பலாம்

**2. குழு நிலை**

- மசோதா அவையின் தேர்வுக் குழுவிற்கு அனுப்பப்படுகிறது.
- மசோதா பகுதி பகுதிகளாகப் பிரித்து ஆராயப்படுகிறது.
- நோக்கத்தை மாற்றாமல் திருத்தம் கொண்டுவரலாம்.
- ஆராய்ந்த பிறகு, மசோதா மீண்டும் அவைக்குத் திரும்ப அனுப்பப்படுகிறது.

**3. பரிசீலனை நிலை (Consideration Stage)**

- மசோதா அலகு அலகுகளாகப் பிரித்து பரிசீலனை செய்யப்படுகிறது.
- ஒவ்வொரு பகுதியும் தனித்தனியாக விவாதிக்கப்பட்டு, வாக்கெடுப்பிற்கு விடப்படும்.
- உறுப்பினர்கள் திருத்தங்களைக் கொண்டுவரலாம்.

3. **மூன்றாம் வாசிப்பு (Third Reading)**

- இங்கு மசோதாவை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செய்யலாம்.
- மசோதாவில் திருத்தங்கள் ஏதும் செய்ய இயலாது.
- பெரும்பான்மையான உறுப்பினர்கள் வாக்களித்தால் மசோதா நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.
- பின்னர் அவைத் தலைவரின் ஒப்புதலோடு மசோதா மற்றொரு அவைக்கு அனுப்பப்படும்.

4. **இரண்டாவது அவை (The Second House)**

- இங்கு மசோதா மூன்று நிலைகளைக் கடந்த செல்கிறது.
- மசோதா மீது நடவடிக்கை எடுக்க நான்கு வழிகள் உள்ளன.
  1. திருத்தம் ஏதும் இல்லாமல் மசோதாவை அப்படியே நிறைவேற்றுதல்

2. திருத்தங்களுடன் மசோதாவை முதல் அவையின் பரிசீலனைக்கு அனுப்புதல்

3. மசோதா மொத்தமாக நிறைவேற்றுதல்

4. மசோதா மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் நிலுவையில் வைப்பது

- இரண்டாவது அவை, மசோதாவின் மீது திருத்தங்கள் ஏதும் செய்யாமல் ஏற்றுக்கொண்டாலோ அல்லது இரண்டாவது அவை செய்த திருத்தத்தை முதலாவது அவை ஏற்றுக்கொண்டாலோ, மசோதா நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டு, குடியசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும்.

- அவ்வாறு இல்லாமல், இரண்டாவது அவை மேற்கொண்ட திருத்தத்தை முதல் அவை ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலோ அல்லது இரண்டாவது அவை ஒட்டுமொத்தமாக மசோதாவை நிராகரித்தாலோ அல்லது இரண்டாவது அவை 6 மாதங்களுக்குள் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றாலோ முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படும்.

- இந்த முரண்பாடு கலப்புக் கூட்டத்தின் (Joint Sitting) மூலமாகப் பெரும்பான்மை அடிப்படையில் முடிவு செய்யப்படும்.

**5. குடியரசுத் தலைவரின் ஒப்புதல் (Assent of the President)**


- இரண்டு அவைகளால் நிறைவேற்றப்பட்ட மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படுகிறது.

- மசோதாவிற்குக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்கலாம்.
  அல்லது
  மசோதாவை நிறுத்திவைக்கலாம்
  அல்லது
  அவையின் மறுபரிசீலனைக்க திருப்பி அனுப்பலாம்

- குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்தால், மசோதா சட்டமாக மாறும். பின்னர் அது சட்டப்புத்தகத்தில் (The statute Book) வைக்கப்படும்.

- மறுபரிசீலனைக்காகக் குடியரசுத்தலைவரால் திருப்பி அனுப்பப்பட்ட மசோதா மீண்டும் நிறைவேற்றப்பட்டு அவருக்கு அனுப்பப்பட்டால், அந்த மசோதாவிற்குக் கண்டிப்பாக ஒப்புதல் வழங்க வேண்டும்.

- குடியரசுத் தலைவருக்கு நிறுத்தி வைக்கும் மறுப்பு அதிகாரம் (suspension Veto) மட்டுமே உண்டு.




**பண மசோதா (Money Biil) (பிரிவு 110)**

- கீழ்க்கண்ட பண்புகளைக் கொண்ட மசோதா பண மசோதாவாகக் கருதப்படும்.

1. வரி விதித்தல், நீக்குதல், குறைத்தல் மற்றும் மாற்றியமைத்தல்
2. மத்திய அரசால் பெறப்படும் கடன்களை ஒழுங்குபடுத்துதல்
3. இந்தியக் குவிப்பு நிதி அல்லது இந்திய அவசரகால நிதி தொடர்பான பாதுகாப்பு, அவற்றில் பணத்தைச் செலுத்துதல் அல்லது எடுத்தல்
4. இந்தியக் குவிப்பு நிதியிலிருந்து செய்யப்படும் செலவுகள்
5. இந்தியக் குவிப்பு நிதி மற்றும் இந்தியப் பொதுக் கணக்குத் தொடர்பான வரவுகள்.
6. மேற்கண்டவை தொடர்பாக ஏற்படும் உடனடி செலவுகள்

- ஒரு மசோதா பண மசோதாவா அல்லது இல்லையா என்று சந்தேகம் எழுந்தால், அதில் மக்களவைத் தலைவரின் முடிவு இறுதியானது.
- மக்களவைத் தலைவரின் முடிவில் நீதிமன்றமோ அல்லது குடியரசுத் தலைவரோ தலையிட முடியாது.
- பணமசோதாவை மாநிலங்களவைக்கோ அல்லது குடியரசுத் தலைவருக்கோ அனுப்பும்போது, இது பண மசோதாதான் என்று உறுதிசெய்து அனுப்புகிறார் மக்களவைத் தலைவர்.
- பண மசோதா மக்களவையில் குடியரசுத்தலைவரின் பரிந்துரையுடன்தான் அறிமுகப்படுத்த முடியும். அதுவும் அமைச்சர்தான் அறிமுகம் செய்ய வேண்டும்.
- மாநிலங்களவை பண மசோதாவை 14 நாட்கள் மட்டுமே வைத்திருக்க முடியும். மாநிலங்களவை செய்த பரிந்துரைகளை மக்களவை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம்.
- மாநிலங்களவை 14 நாட்களுக்குள் பண மசோதாவை திருப்பி அனுப்பவில்லை என்றால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

- பண மசோதாவின் மீத மக்களவைக்கு அதிக அதிகாரம் உண்டு.

- சாதாரண மசோதாவின் மீது இரு அவைகளின் அதிகாரங்கள் யாவும் ஒன்றுபோல்தான்.

- பண மசோதாவிற்குக் குடியரசுத்தலைவர் ஒப்புதல் தரவேண்டும் அல்லது நிறுத்திவைக்க வேண்டும். ஆனால் திருப்பி அனுப்ப இயலாது.

- பொதுவாகப் பண மசோதா குடியரசுத்தலைவரின் பரிந்துரையுடன் அறிமுகப்படுத்தப்படுவதால், அதற்கு எளிதாக ஒப்புதல் கிடைத்துவிடும்.

## நிதி மசோதாக்கள் (Finance Bills)

- நிதி தொடர்பான வரவு அல்லது செலவுகளை குறிப்பது நிதி மசோதாவாகும்.

- ஆனால், அரசியலமைப்பு நிதி மசோதாவை மூன்று பிரிவுகளாக பிரிக்கிறது.
  1. பண மசோதாக்கள் - பிரிவு 110
  2. நிதி மசோதாக்கள் I – பிரிவு 117 (1)
  3. நிதி மசோதாக்கள் II – பிரிவு 117 (3)

- பண மசோதாவும் நிதி மசோதாவின் கீழ்தான் வகைப்படுத்தப்பட்டு உள்ளது.

- ஆகவே, அனைத்துப் பண மசோதாக்களும் நிதி மசோதாக்கள்தான், ஆனால் அனைத்து நிதி மசோதாக்களும் பண மசோதாக்கள் அல்ல

### கலப்புக் கூட்டத்தொடர் (Joint Sitting):

கீழ்க்கண்ட 3 நிலைகளில் கலப்புக் கூட்டம் (பிரிவு 108) தேவைப்படுகிறது.

1. மசோதாவை மற்றோரு அவை நிராகரித்தால்

2. மசோதாவில் செய்யப்பட்டுள்ள திருத்தங்களை அவைகள் ஏற்க மறுத்தால்

3. மசோதாவைப் பெற்ற அவை அதன் மீது 6 மாதங்களுக்குள் எந்த முடிவும் எடுக்காமல் இருந்தால்,

- இந்தச் சூழ்நிலைகளில் குடியரசுத்தலைவர் கலப்புக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கிறார்.

- கலப்புக் கூட்டத்தொடர் சாதாரண மற்றும் நிதி மசோதாக்களுக்கு மட்டும் பொருந்தும். பண மசோதா அல்லது அரசியலமைப்புத் திருத்த மசோதாக்களுக்குப் பொருந்தாது.

- அரசியலமைப்புத் திருத்த மசோதாவை ஒவ்வொரு அவையிலும் தனித்தனியாக நிறைவேற்ற வேண்டும்.

- கலப்புக் கூட்டத்தொடருக்கு மக்களவைத் தலைவர்தான் தலைமை தாங்குவார். இவர் இல்லாதபோது மக்களவைத் துணைத் தலைவர் தலைமை வகிப்பார்.

- மாநிலங்களவைத் தலைவர் (The Chairman of Rajya Sabha) ஒருபோதும் கலப்புக் கூட்டத்தொடருக்கு தலைமை வகிப்பதில்லை. ஏனெனில், அவர் எந்த அவையிலும் உறுப்பினராக இல்லை.

- குறைந்தபட்ச உறுப்பினர்கள் (The Quorum) மொத்த உறுப்பினர்களில் 1/10 பங்கு.

- கலப்புக் கூட்டத்தொடர் மக்களவை விதியின்கீழ் நடைபெறும்.

- அவையில் உள்ள உறுப்பினர்களில் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தால் மசோதா நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

- கலப்புக் கூட்டத்தொடரின்போது, பொதுவாக மசோதாவின் மீது புதிய திருத்தங்கள் மேற்கொள்வதற்கு அரசியலமைப்பு அனுமதிப்பதில்லை.

- ஆனால், கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் திருத்தங்களை அனுமதிக்கிறது.
  1. இரண்டு அவைகளுக்கு இடையே உடன்பாடு ஏற்படுவதில் அந்தத் திருத்தங்கள் தடையாக இருந்தால்
  2. மசோதா நிறைவேறாமல் காலதாமதம் ஆவதற்கு அந்தத் திருத்தங்கள்தான் காரணம் என்றால்.

- 1950 முதல் இதுவரை மூன்று முறை கலப்புக் கூட்டத்தொடர் கூட்டப்பட்டு உள்ளது. அ. வரதட்சணை தடுப்பு மசோதா, 1960.

<u>மாநிலங்களவை - மக்களவை ஒப்பீடு</u>

## மக்களவையோடு சமமான அதிகாரங்கள் (Equal status with Lok Sabha)

- சாதராண மசோதாக்களை அறிமுகம் செய்தல் மற்றும் நிறைவேற்றுதல்.

- அரசியலமைப்புத் திருத்த மசோதாக்களை நிறைவேற்றுதல்.

- இந்தியக் குவிப்பு நிதியிலிருந்து செய்யப்படும் செலவு தொடர்பான நிதி மசோதாக்கள்.

- குடியரசுத்தலைவர் தேர்தல் மற்றும் குற்ற விசாரணை.

- உச்சநீதிமன்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளை நீக்கம் செய்வதில்.

- அவசர சட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதில்.

- பிரதம அமைச்சர்களைத் தேர்வு செய்வதில்

- நிதி ஆணையம், மத்திய பணியாளர் தேர்வாணையம், மற்றும் இந்திய தலைமை கணக்குத் தணிக்கையாளரின் அறிக்கையை ஆராய்வதில்.

- உச்சநீதிமன்றம் மற்றும் மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் செயல்பாட்டு எல்லையை விரிவுபடுத்தலில்.

## மக்களைவயோடு சமனற்ற நிலை ( Unequal status with Lok Sabha):

- பண மசோதா மக்கள் அவையில் மட்டும் தான் அறிமுகப்படுத்த முடியும்.

- பண மசோதாவின் மீது மாநிலங்களவை எந்த திருத்தம் செய்ய இயலாது பரிந்துரையுடனோ அல்லது பரிந்துரையின்றியோ 14 நாட்களுக்குள் மக்களவைக்குத் திருப்பியனுப்ப வேண்டும் மக்களவை பரிந்துரையை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம்

- கலப்பு கூட்டத்தொடருக்கு தலைமை வகிப்பவர் மக்களவைத் தலைவர்.

- கலப்புக் கூட்டத்தெடரில் கூட மக்களவை உறுப்பினர்கள்தான் அதிக எண்ணிக்கையில் இருப்பார்கள்.

- பட்ஜெட்டின் மீது மாநிலங்களவை விவாதம் மட்டுமே நடத்த முடியும் வாக்கெடுப்பு நடத்த இயலாது.

- தேசிய அவசரநிலை பிரகடனத்தை (National Emergency) கைவிடுவது தொடர்பான தீர்மானம் மக்களவையில்தான் நிறைவேற்ற முடியும்.

- அமைச்சரவைக் கூட்டாக மக்களவைக்குப் பொறுப்பானது.

- நம்பிக்கையில்லாத் தீர்மானம் மக்களைவயில்தான் கொண்டுவர முடியும்.

## மாநிலங்களவையின் சிறப்பு அதிகாரங்கள்

- மாநிலப் பட்டியலில் உள்ள ஒரு துறையின் மீது சட்டம் இயற்றுதல் அதிகாரம்

- புதிய அகில இந்திய பணிகளை உருவாக்குதல்

- மக்களவையால் அவசரமாக இயற்றப்படும் சட்டங்களை ஆராய்கின்றது.

- கூட்டாட்சி சம நிலையை பாதுகாக்கிறது

- நேரடியாகத் தேர்தலைச் சந்திக்க விரும்பாத அறிஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் இடமாக உள்ளது

## நாடளுமன்ற இறையாண்மை

- நாடளுமன்ற இறையாண்மை என்பது, இங்கிலாந்து நாடாளுமன்றத்தோடு தொடர்புடையது
- இங்கிலாந்து நாடாளுமன்றத்திற்கு உச்ச அதிகாரம் உண்டு அதன் அதிகார எல்லைக்கு தடையே இல்லை இங்கிலாந்து அரசியலமைப்பின் முக்கிய பண்பாக இது கருதப்படுகிறது

**இங்கிலாந்து சட்ட நிபுணர் ஏ. வி டைசி** இக்கொள்கை முன்று விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது என்றார்

1. எந்தச் சட்டத்தையும் உருவாக்க திருத்த மற்றும் நீக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உண்டு
2. அரசியலமைப்புத் சட்டங்களையும் சாதராண சட்டங்களைப் போல் இயற்றுதல் அதாவது இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் அரசியலமைப்பு அதிகாரத்திற்கும் மற்றும் சட்டமன்ற அதிகாரத்திற்கும் இடையே வேறுபாடு ஏதும் கிடையாது
3. இங்கிலாந்து நீதிதுறைக்கு நீதிப்புனராய்வு அதிகாரம் கிடையாது

இந்திய நாடாளுமன்றம் இதேபோல் இறையாண்மை மிக்கதாகக் கருதமுடியாது

ஏனெனில் சட்டபூர்மான தடைகள் இதற்கு உண்டு

இந்த வகையில் இந்திய நாடளுமன்றம் அமெரிக்க நாடாளுமன்றத்தை ஒத்ததுள்ளது.

டீ லோல்மி (De Lolme) என்ற இங்கிலாந்து அரசியல் ஆய்வாளர் “இங்கிலாந்து நாடாளுமன்றத்திற்கு ஆணைப் பெண்ணாக்குகிற மற்றும் பெண்ணை ஆணாக்குகிற அதிகாரத்தைத் தவிர எந்தச் செயலலையும் செய்யும் அதிகாரம் உண்டு” என்றார்

## இந்திய நாடாளுமன்றத்தின் இறையாண்மைக்குத் தடையாக உள்ள காரணிகள்

1. **எழுதப்பட்ட அரசியலமைப்பு**

- அரசியலமைப்பு நாட்டின் அடிப்படை சட்டமாக உள்ளது
- சட்டமன்றம் நீதித்துறை மற்றும் நிர்வாகத்துறை ஆகியவற்றின் அதிகாரங்கள் பகுக்கப்பட்டுள்ளன.
- நாடாளுமன்றத்தின் சட்டமன்ற அதிகாரத்திற்கும் மற்றும் அரசியலமைப்பு அதிகாரத்திறகும் இடையே சட்ட வேறுபாடு உள்ளது. ஆனால் இங்கிலாந்தில் அரசியலமைப்பு நாட்டின் அடிப்படை சட்டமாகவோ அல்லது எழுதப்பட்டதாவோ இல்லை

2. **அடிப்படை உரிமைகள்**

- அடிப்படை உரிமைகள் நாடாளுமன்ற அதிகாரத்திற்குத் தடையாக உள்ளது

- அடிப்படை உரிமைகள் பறிப்பது தொடர்பான எந்தச் சட்டத்ததையும் இயற்றக் கூடாது என்று பிரிவு 13 கூறுகிறது

- இங்கிலாந்தில் நீதிமன்றத்தின் முலம் தீர்வுகானக்கூடிய வகையிலான அடிப்படை உரிமைகள் ஏதும் இல்லை. இதனால் குடிமக்களுக்கு உரிமைகள் ஏதும் இல்லை

- சட்டத்தின் ஆட்சி (Rule of Law) நடைமுறையில் உள்ளதால் இங்கிலாந்தில் சுகந்திரம் மிகுதியாக உள்ளது.

### 3. நீதிப்புனராய்வு தன்மை

- நீதிப்புனராய்வு நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைக் குறைகிறது

- நீதிப்புனராய்வு அதிகாரம் உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்றங்களுக்கு உண்டு

- நிதிப்புனராய்வு என்ற தன்மை இங்கிலாந்தில் இல்லை

- சிறப்பு வழக்குகளுக்கு நாடாளுமன்ற சட்டங்களைத்தான் இங்கிலாந்து நீதிமன்றங்கள் பின்பற்றுகின்றன.

### 4. கூட்டாட்சி அமைப்பிலான அரசாங்கம்

- இந்தியாவில் கூட்டாட்சி அமைப்பிலான அரசாங்கம் உள்ளது

- ஆதிகாரங்கள் மத்திய மாநில அரசுகளுக்கிடையே பகுக்கப்பட்டு உள்ளன

- இங்கிலாந்து ஒற்றையாட்சி (Unitary) தன்மையைக் கொண்டது

- ஆதிகாரங்கள் யாவும் மத்திய அரசிடம் குவிக்கப்பட்டுள்ளன

## நாடாளுமன்ற விருப்ப உரிமைகள் (Parliamentary privileges)

- நாடாளுமன்ற விருப்ப உரிமை இரண்டு அவைகளுக்கான சிறப்பு உரிமைகள்.

- விவாதங்கள் அல்லது குழுக்களில் பேசுகின்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்றது.

- இது இந்திய தலைமை வழக்கறிஞர் மற்றும் அமைச்சர்களுக்கும் பொருந்தும்.

- இந்த விருப்ப உரிமைகள் குடியரசுத் தலைவருக்கு வழங்கப்படவில்லை.

- ஒவ்வொரு அவையிலும் கூட்டாகவோ அல்லது தனியாகவோ உறுப்பினர்கள் இந்த உரிமையை அனுபவிக்கின்றனர்

- ஆவையின் விவாதங்கள் அறிக்கையில் மற்றும் நடவடிக்கைகளை வெளிக்கொணரும் உரிமை நாடாளுமன்றத்திற்கு உண்டு அதேபோல் இடை மற்றவர்கள் வெளியிடக்கூடாது என்று சொல்லும் உரிமையும் நாடாளுமன்றத்திற்கு உண்டு

- ஆனால் 44வது திருத்த சட்டம், 1978 உண்மையான அவை நடவடிக்கைகளை வெளியிடுவதற்கு அனுமதியளிக்கிறது

- இரகசியக் கூட்டம் நடத்தும் உரிமை

- தனது சொந்த விதிமுறைகளில் திருத்தம் செய்யும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உண்டு

- அவை விதிமீறலுக்கு தண்டனை வழங்கும் அதிகாரம்

- உறுப்பினர்கள் கைது, தண்டனை வழங்கியது மற்றும் விடுவித்தல் தொடர்பான தகவல்களைப் பெறும் உரிமை உண்டு

- விசாரணையைத் துவக்கி சாட்சிகளை வரவழைக்கும் உரிமை

- அவை தெடர்பான விவாதங்கள் / நடவடிக்கைகள் பற்றி நீதிமன்றம் விவாதிக்க முடியாது

- அவையின் எல்லைக்குள் அவைத் தலைவரின் அனுமதியில்லாமல் உறுப்பினர்கள் கைது செய்ய இயலாது

- நாடாளுமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதோ அல்லது துவங்குவதற்கு 40 நாட்கள் முன்போ அல்லது பின்போ சிவில் வழக்குகளில் கைது செய்ய இயலாது. ஆனால் இது குற்றவியல் அல்லது தடுப்பு காவலுக்குப் பொருந்தாது.

- நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு முழு சுகந்திரம் உண்டு

- அவை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது நீதிமன்றத்தில் சாட்சி சொல்வதிலிருந்து விலக்கு பெறலாம்.

- ஒரு செயல் அவையின் கண்ணியத்திற்க்க களங்கம் ஏற்படுவதாக இருந்தால் இது அவைவயின் அவமதிப்பதாக (Contempet of House) கருதப்படும்

- இதற்கான முலங்கள்யாவும் அரசியலமைப்புப் பிரிவுகள் நாடாளுமன்றத்தின் பல்வேறு சட்டங்கள் அவை விதிகள் மற்றும் நீதிமன்ற தீர்ப்புகள் முலம் கிடைக்கின்றன.

## நாடாளுமன்றத்தின் பன்முகப் பணிகள் (Multifunctional Role of parliament)

இந்திய அரசியல் - நிர்வாக அமைப்பில் நாடாளுமன்றம் மைய அமைப்பாக உள்ளது

இந்திய நாடாளுமன்றம் அதிகமான அதிகாரங்ளைப் பெற்றுள்ளது

1. **சட்டமன்ற அதிகாரங்கள் மற்றும் பணிகள்** :

- நாட்டை ஆளுவதற்குத் தேவையான சட்டங்களை இயற்றுதல்.
- மத்திய எஞ்சிய பட்டியலின் மீது சட்டம் இயற்றும் அதிகாரம் அதிகம்.
- தேசிய அவசரச் சட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல்
- நாடாளுமன்றம் உருவாக்கும் சட்டம் யாவும் வரிவடிவத்தில்தான் இருக்கும் இதற்ககுத் தேவயையான விரிவான விதிகளை உருவாக்கும் அதிகாரத்தை நிர்வாகத்துறையிடம் விட்டுவிடுகிறது இதற்கு ஒப்புடைவுச் சட்டம் இயற்றல் அல்லது நிர்வாகத் துறைச் சட்டம் இயற்றல் அல்லது சார்-நிலைச் சட்டம் இயற்றல் என்று பெயர்
- உருவாக்கப்பட்ட விதிகளை நாடாளுமன்றம் ஆய்வு செய்யும்

2. **அரசியலமைப்பு அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

- அரசியலமைப்பைத் திருத்தும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உண்டு
- அரசியலமைப்பின் பெரும்பான்மையான பகுதி சிறப்புப் பொரும்பான்மையுடன் திருத்தப்படுகிறது. சில பகுதிகள் எளிய பெரும்பான்மையுடன் திருத்தப்படுகிறது.
- அரசியலமைப்புத் திருத்தத்தை துவக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்குத்தான் உண்டு சட்டமன்றங்களுக்கு கிடையாது. ஒரே ஒரு விதிவிலக்கைத் தவிர அதாவது சட்ட மேலவையை உருவாக்கவோ அல்லது நீக்கவோ செய்யும் செயலில்
- அரசியலமைப்பின் அடிப்படை அமைப்பை மாற்ற இயலாது.

3. **நிர்வாக அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

- நிர்வாக துறை நாடாளுமன்றத்திற்குப் பொறுப்பானது.
- கேள்வி நேரம், நேரமில்லா நேரம் கவனயீர்ப்புத் தீர்மானம், நம்பிக்கையில்லாத் தீர்மானம் போன்றவற்றின் முலம் நிர்வாகத் துறையைக் கட்டுப்படுத்துகிறது.
- குழுக்களின் முலம் நிர்வாகத் துறையின் செயல்பாட்டை மேற்பார்வை செய்கிறது.
- அமைச்சர்கள் கூட்டாக நாடாளுமன்றத்திற்கும் குறிப்பாக மக்களவைக்கும் பொறுப்பானவர்கள்.

- மக்களவையின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெறும்வரையின்தான் அமைச்சர்கள் பதவியில் தொடர முடியும்.

## 4. நிதி அதிகாரங்கள் மற்றும் பணிகள்

- நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் எந்த வரியையும் விதிக்கவோ அல்லது வசூலிக்கவோ அல்லது செலவு பண்ணவோ முடியாது.

- அதனால்தான் பட்ஜெட் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது.

- நிதிக்குழுக்களின் மூலம் அரசாங்கம் செலவு செய்வதைக் கண்காணிக்கிறது.

- ஒதுக்கப்பட்ட பணம் அந்த நிதி ஆண்டிற்குள் செலவழிக்கவில்லை என்றால் அந்த நிதி இந்திய குவிப்பு நிதிக்கு திரும்பி வந்துவிடும் இது காலவாதியாகும் விதி (Rule of Lapse)எனப்படுகிறது.

- நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் எந்த பணத்தையும் வைத்திருக்கமுடியாது. என்பதை இது உணர்த்துகிறது.

- அதனால் தான் ஆண்டின் இறுதியில் செலவு செய்வதில் வேகம் காணப்படுகிறது இது மார்ச் மாத வேகம் (March Rush) எனப்படும்.

## 5. நீதி அதிகாரங்கள் மற்றும் பணிகள்

- விதிமீறலுக்காக உறுப்பினர்களின் மற்றும் இதர நபர்களைத் தண்டிக்கும் அதிகாரம்

- குற்ற விசாரணையின் மூலம் குடியரசுத் தலைவரின் நீக்கும் அதிகாரம்.

- குடியரசுத் துணைத் தலைவரை நீக்குதல் அதிகாரம்.

- உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள், தலைமைத் தேர்தல் ஆணையாளர், தலைமைக்குத் கணக்குதணிக்கையாளர், ஆகியோரை நீக்கும் அதிகாரம்.

## 6. தேர்தல் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

- குடியரசுத் தலைவரின், குடியரசுத்துணைத் தலைவர் ஆகியோரை தேர்வு செய்கிறது

- மக்களவைத் தலைவர், மக்களவைத் துணைத் தலைவர், மாநிலங்களவையின் துணைத் தலைவர் ஆகியயோர்களைத் தேர்வு செய்தல்.

- குடியரசுத் தலைவரின், குடியரசுத்துணைத் தலைவர் தேர்தல்கள் தொடர்பான சட்டங்களை இயற்றுதல்.

## 7. மற்ற அதிகாரங்கள் மற்றும் பணிகள்

- மூன்று அவசரநிலை பிரகடனங்களை அங்கீகரிக்கும் அதிகாரம்
- சட்டமன்றத்தின் அனுமதியோடு மேலவையை உருவாக்கலாம் அல்லது நீக்கலாம்.
- மாநிலத்தின் எல்லையைக் கூட்டுதல் அல்லது குறைத்தல் மற்றும் பெயர்களை மாற்றுதல்.
- உச்சநீதிமன்றத்தின் மற்றும் உயர்நீதிமன்றத்தின் அமைப்பு மற்றும் எல்லையை ஒழுங்குப்படுத்துமல்.
- இரண்டு அதற்கு மேற்ப்பட்ட மாநிலங்களுக்குப் பொதுவான உயர்நீதிமன்றத்தை ஏற்படுத்துதல்
- தேசிய மற்றும் பன்னாட்டு விசயங்களை விவாதிக்கும் உச்ச அமைப்பாக உள்ளது

**அரசாங்கம் மற்றும் நிர்வாகத் துறையை திறன்பட நாடாளுமன்றத்தால் கட்டுப்படுத்த இயலாததற்கான காரணங்கள் ( Ineffectiveness of parliamentary control):**

- கொள்கைகளை உருவாக்குவதில் நிர்வாகத் துறை முக்கிய பங்கு வகிக்கிறது.
- பெரிய நிர்வாக அமைப்பை நாடாளுமன்றத்தால் கட்டுப்படுத்த போதுமான கால அவகாகம் இல்லை.
- வரவு செலவு திட்டத்தை முழுமையாக புரிந்துகொள்ளும் அளவிற்கு உறுப்பினர்களுக்கு கால அவகாசம் இல்லை
- நாடாளுமன்றம் பெரிய அமைப்பாக இருப்பது.
- வலிமையான எதிர்கட்சி இல்லாதது.
- செலவு செய்த பின்னர் பொதுகணக்கு குழு ஆராய்கிறது.
- அதிகப்படியான அவசர சட்டங்களை இயற்றுதல் நாடாளுமன்றத்தின் பணியை குறைக்கிறது
- ஒப்படைவு சட்டங்களை இயற்றும் செயல் நாடாளுமன்றத்தின் முக்கியத்துவத்தை குறைக்கிறது.
- நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை ஆதரவை நிர்வாகத்துறை பெற்றிருப்பதால் அதிக அளவில் விமர்சிக்க இயலவில்லை

# நாடாளுமன்றக் குழுக்கள் (Parliament Committees)

- நாடாளுமன்றக் குழுக்கள் பற்றி இந்திய அரசியலமைப்பில் வெவ்வேறு இடங்களில் சொல்லப்பட்டுள்ளன. ஆனால், இவற்றிற்கென விதிமுறைகள் ஏதும் சொல்லப்படவில்லை.

- இரு அவைகளின் விதிகள்தான் இதைக் கட்டுப்படுத்துகின்றன.

- நாடாளுமன்றக் குழுக்கள் இரு வகைப்படும்.
  1. நிலைக் குழுக்கள்
  2. தற்காலிகக் குழுக்கள்

## 1. நிலைக்குழுக்கள் (Standing Committees)

- நிலைக்குழுக்கள், செய்யும் பணியின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்படுகின்றன.

## 1. நிதிக்குழுக்கள் (Financial Committees)

### 1. பொதுக் கணக்குக் குழு (Public Accounts Committee)

- இந்தியச் சட்டம் 1919-ன் படி, இக்குழு 1921-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

- மொத்த உறுப்பினர்கள் 22 (மக்கள் அவை 15, மாநிலங்களவை – 7)

- உறுப்பினர்களின் பதவிக்காலம் ஓர் ஆண்டு, அமைச்சர் உறுப்பினராக முடியாது.

- மக்களவைத் தலைவர், இக்குழுவிற்கான தலைவரை நியமனம் செய்கிறார்.

- 1966 – 67ம் ஆண்டு வரை ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்தான் இக்குழுவின் தலைவராக இருந்தார். அதன்பின்பு, எதிர்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் தலைவராகச் செயல்பட்டு வருகிறார்.

**பணிகள்:**

- குடியரசுத் தலைவரால் நாடாளுமன்றத்தில் வைக்கப்படும் இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளரின் ஆண்டு கணக்குத் தணிக்கை அறிக்கையை ஆய்வு செய்தல்.

- மாநில அரசின் நிறுவனங்கள், வர்த்தக அமைப்புகள் மற்றும் உற்பத்தி திட்டங்கள் தொடர்பான தலைமைக் கணக்குத் தணிக்கையாளரின் அறிக்கையை ஆய்வு செய்தல்.

- தன்னாட்சி, பகுதி – தன்னாட்சி நிறுவனங்கள் தொடர்பான தலைமைக் கணக்குத் தணிக்கையாளரின் அறிக்கையை ஆய்வு செய்தல்.

- மக்களவையால் ஒதுக்கப்பட்ட நிதியைவிட அதிகமாக எந்தப் பணிக்கும் செலவு செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்தல்.

**வரம்பு**

- செலவு செய்யப்பட்ட பின்புதான் இக்குழு ஆராய்கின்றது.
- அன்றாட நிர்வாகத்தில் தலையிடாது
- இதன் பரிந்துரைகள் யாவும் ஆலோசனைகள் தான்
- இக்குழு நிர்வாக அமைப்பாக செயல்படவில்லை. எனவே, ஆணைகள் ஏதும் பிறப்பிக்க இயலாது. இக்குழுவின் ஆய்வு அறிக்கை மீது இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்குத்தான் உண்டு.

## 2. மதிப்பீட்டுக் குழு (Estimates committee)

- இக்குழுவின் உருவாக்கம் 1921 – ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட நிதி நிலைக் குழுவிலிருந்து (Standing Financial Committee) துவங்குகிறது.
- சுதந்திரத்திற்குப் பின்பு, அப்போதைய நிதியமைச்சர் ஜான் மாத்தாய் பரிந்துரையின் அடிப்படையில் 1950-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
- தற்போதைய உறுப்பினர்களின் எண்ணிக்கை 30, அனைவரும் மக்களவை உறுப்பினர்கள்.
- மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு எந்தப் பிரதிநிதித்துவமும் இல்லை
- உறுப்பினர்களின் பதவிக்காலம் ஓர் ஆண்டு
- அமைச்சர் உறுப்பினராகப் பதவி வகிக்க முடியாது
- மக்களவைத் தலைவர், இக்குழுவின் தலைவரை நியமனம் செய்கிறார்.

**பணிகள்**

- வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள மதிப்பீடுகளை ஆய்வு செய்தல் மற்றும் பொது செலவினத்திற்கு உரிய பொருளாதாரத்தைப் பயன்படுத்த ஆலோசனை வழங்கல்
- நிர்வாகத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான மற்றும் கொள்கைகளை வலியுறுத்துதல்
- மதிப்பீட்டில் சொல்லப்பட்டுள்ள கொள்கைக்கு உட்பட்டுதான் பணம் செலவு செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்தல்.
- திட்ட மதிப்பீடுகளை, அந்த நிதியாண்டு முழுவதும், கால முறையாக ஆய்வு செய்து அவைக்கு அறிக்கை அளிக்கிறது.
- இக்குழு தொடர்ச்சியான பொருளாதாரக் குழு என்று அழைக்கப்படுகிறது.

**வரம்பு**

- பட்ஜெட் மதிப்பீடு வாக்கெடுப்பிற்கு உட்படுத்தப்பட்ட பின்பு தான் அது குறித்து ஆராய்கிறது.
- நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள கொள்கை குறித்து இக்குழு கேள்வி எழுப்ப இயலாது.
- இதன் பரிந்துரைகள் யாவும் ஆலோசனைகள் தான்.
- தலைமைக் கணக்கு தணிக்கையாளரின் உதவி இக்குழுவிற்குக் கிடைப்பதில்லை.

### 3. பொது நிறுவனங்களுக்கான குழு (Committee on Public Undertakings)

- கிருஷ்ண மேனன் குழு பரிந்துரையின் அடிப்படையில், 1964-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது இக்குழு.
- மொத்த உறுப்பினர்கள் 22 (மக்களவை – 15, மாநிலங்களவை – 7)
- உறுப்பினர்களின் பதவிக் காலம் ஓர் ஆண்டு.
- அமைச்சர் உறுப்பினராகப் பதவி வகிக்க முடியாது.
- மக்களவைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரை இக்குழுவின் தலைவராக நியமிக்கிறார் மக்களவைத் தலைவர்.

**பணிகள்**

- பொது நிறுவனங்களின் கணக்குகள் மற்றும் அறிக்கைகளை ஆய்வு செய்தல்
- பொது நிறுவனங்கள் தொடர்பான தலைமைக் கணக்குத் தணிக்கையாளரின் அறிக்கையை ஆய்வு செய்தல்
- உரிய வணிகக் கொள்கைகளின் அடிப்படையில், நிறுவனங்களின் செயல்பாடுகள் அமைந்துள்ளனவா என்று ஆய்வு செய்தல்.

**வரம்பு**

- அரசாங்கத்தின் பெரிய கொள்கைகளைப் பற்றி ஆய்வு செய்வதில்லை.
- நிறுவனங்களின் அன்றாடச் செலவுகளைப் பற்றி ஆய்வு செய்வதில்லை.
- செலவு செய்தபின்னர்தான் ஆய்வு செய்கிறது.
- தொழில்நுட்ப விசயங்களில் தலையிடுவதில்லை / ஆய்வு செய்வதில்லை.
- இதன் பிரிந்துரைகள் யாவும் வெறும் ஆலோசனைகள்தான்.

## 2. துறை ரீதியிலான நிலைக் குழுக்கள் (Departmental Standing Committees)

- 1993-ம் ஆண்டு, மக்களவையின் விதிகள் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 17 துறைரீதியிலான நிலைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன.
- 2004-ம் ஆண்டு இக்குழுக்களின் எண்ணிக்கை 24 ஆக உயர்த்தப்பட்டது.
- நிர்வாகத் துறையை நாடாளுமன்றத்திற்கு பொறுப்பானதாக ஆக்குவதுதான் இதன் நோக்கம், குறிப்பாக நிதி பொறுப்பாக்கம்.
- அதே போல், பட்ஜெட் விவாதம் சிறப்பாக நடைபெற இவை நாடாளுமன்றத்திற்கு உதவுகின்றன.
- இந்த 24 நிலைக் குழுக்களில் 16 மக்கள் அவையின் கீழும், 8 குழுக்கள் மாநிலங்கள் அவையின் கீழும் செயல்படுகின்றன.
- ஒவ்வொரு குழுவிலும் 31 உறுப்பினர்கள் (மக்கள் அவை – 21, மாநிலங்கள் அவை – 10)
- மக்கள் அவைத் தலைவர் மக்களவைக்கான 21 உறுப்பினர்களை நியமனம் செய்கிறார்.
- அதேபோல், மாநிலங்களைத் தலைவர், மாநிலங்களவைக்கான உறுப்பினர்களை நியமனம் செய்கிறார்.
- அமைச்சர்கள் உறுப்பினராகப் பதவி வகிக்க முடியாது.
- உறுப்பினர்களின் பதவிக்காலம் ஓர் ஆண்டு.

| மக்கள் அவையின் கீழ் செயல்படும் குழுக்கள் | மாநிலங்களவையின் கீழ் செயல்படும் குழுக்கள் |
|---|---|
| விவசாயத் துறைக்கான குழு<br>பாதுகாப்புத் துறைக்கான குழு<br>நிதித்துறைக்கான குழு<br>வெளிவிவகாரத் துறைக்கான குழு<br>ரயில்வே துறைக்கான குழு மற்றும் பிற | வணிகத்துறை குழு<br>உள் துறைக்குழு<br>மனித வள மேம்பாட்டுத் துறை குழு<br>மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான குழு<br>தொழில் துறைக்கான குழு |

## 3. விசாரணை குழுக்கள் (Committees to Inquire)

### 1. மனுக்கள் குழு (Committee on Petitions)

- மசோதாக்கள் மீதான மனுக்கள் மற்றும் பொது மக்கள் நலன் தொடர்பான மனுக்களை ஆராய்தல்.
- இது தொடர்பான மக்கள் அவைக் குழுவில் 15 உறுப்பினர்களும் மாநிலங்களவைக் குழுவில் 10 உறுப்பினர்களும் உள்ளனர்.

2. **சிறப்பு உரிமைகள் குழு (Committee on Privileges)**

- இக்குழு பகுதி – நீதிமன்றத்தின் (semi – Judicial) தன்மையைக் கொண்டது.

- அவை உரிமை மீறல்களை ஆராய்ந்து, உரிய நடவடிக்கை எடுக்கப்பரிந்துரை செய்கிறது.

- மக்களவைக் குழுவில் 15 உறுப்பினர்களும். மாநிலங்களவைக் குழுவில் 10 உறுப்பினர்களும் உள்ளனர்.

3. **நெறிமுறைகள் குழு (Ethics Committee)**
   - இக்குழு மாநிலங்கள் அவையில் 1997 – ம் ஆண்டிலும், மக்கள் அவையில் 2000ம் ஆண்டிலும் ஏற்படுத்தப்பட்டது.

   - நாடாளுமன்ற உறுப்பினர்களின் அவை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி, அவையின் கண்ணியத்தைக் காப்பதற்காக ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

4. **சரிபார்த்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் குழுக்கள் (Committees to Scrutinise and Control)**

1. **அரசாங்க உறுதிமொழி குழு (Committee on Government Assurance)**
   - அமைச்சர்கள் அவ்வப்போது அவையில் தெரிவிக்கும் உறுதிமொழிகள் மற்றும் வாக்குறுதிகளைப் பற்றி ஆராய்வது இக்குழுவின் நோக்கம்

   - இக்குழு 1953-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

   - மக்கள் அவை குழு 15 உறுப்பினர்களையும், மாநிலங்களவைக் குழு 10 உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

2. **பெண்கள் மேம்பாட்டுக் குழு (Committee on Empowerment of Women)**
   - இக்குழு 1997-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

   - இக்குழுவில் 30 உறுப்பினர்கள் உள்ளனர் (மக்கள் அவை 20, மாநிலங்கள் அவை 10).

   - தேசியப் பெண்கள் ஆணையத்தின் அறிக்கை மற்றும் பெண்கள் நலத்தை மேம்படுத்துவதற்காக மத்திய அரசால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை ஆய்வு செய்தல்.

3. **அவையில் வைக்கப்படும் ஆவணங்களைச் சரிபார்க்கும் குழு (Committee on Papers Laid on the Table)**
   - அமைச்சர்களால் அவையில் வைக்கப்படும் ஆவணங்கள், அரசியலமைப்பு வழிமுறைகளின்படி சரியாக உள்ளனவா என்பதை இக்குழு ஆராயும்.

   - மக்கள் அவையில் இக்குழு 15 உறுப்பினர்களையும், மாநிலங்கள் அவையில் இக்குழு 10 உறுப்பினர்களையும் கொண்டிருக்கும்.

- இக்குழு 1975-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

4. **சார் - நிலை சட்டமியற்றல் தொடர்பான குழு (Committee on Subordinate Legislation)**
   - இக்குழு 1953 ல் ஏற்படுத்தப்பட்டது.
   - ஒழுங்குமுறைகள், விதிகள், துணை – விதிகள் போன்றவற்றை உருவாக்க, அரசியலமைப்பு அல்லது நாடாளுமன்றத்தால் நிர்வாகத்துறைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை, அத்துறை சரியாக செய்கின்றதா என்பதை ஆய்வு செய்து அறிக்கை அளிப்பது இக்குழுவின் பணியாகும்.
   - இரண்டு அவைகளிலும், இக்குழுக்களில் 15 உறுப்பினர்கள் உள்ளனர்.

5. **உறுப்பினர்கள் வேறு ஏதேனும் பதவியில் உள்ளனரா என்பதற்கான இணைக்குழு (Joint committee on office of profit)**
   - மத்திய, மாநில மற்றும் ஒன்றிய பிரதேச அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்படும் குழுக்கள் மற்றும் இதர அமைப்புகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி வகித்து ஊதியம் பெறுகின்றனரா என்பதை ஆய்வு செய்வது இக்குழுவின் பணியாகும்.
   - இக்குழுவின் மொத்த உறுப்பினர்கள் 15 (மக்களைவ 10, மாநிலங்களவை 5)

6. **தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்திற்கான குழு (Committee on Welfare of SC and STs)**
   - இக்குழுவில் 30 உறுப்பினர்கள் உள்ளனர் (மக்களவை 20, மாநிலங்களவை 10)
   - தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர்க்கான தேசிய ஆணையங்களின் அறிக்கையை ஆராய்தல்.
   - அரசியலமைப்பில் சொல்லப்பட்டுள்ளபடி அவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்கள் செயல்படுகின்றனவா என்பதை உற்று நோக்குவது இதன் பணியாகும்.

5. **அவையின் அன்றாடப் பணிகளுக்கான குழு (Committee Relating to the Day-to-day Business of the House)**

   1. **அலுவல் ஆலோசனைக் குழு (Business Advisory Committee)**
      - அவை நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான கால அட்டவணையை நிர்ணயிக்கிறது.
      - இக்குழு, மக்கள் அவையில் 15 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும், மக்களவைத் தலைவர், இக்குழுவின் தலைவராகச் செயல்படுகிறார்.

- மாநிலங்கள் அவையில் இக்குழு 11 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். மாநிலங்களவைத் தலைவர்தான் இக்குழுவின் தலைவர்.

**2. விதிகள் குழு (Rules committee)**

- அவை நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான வழிமுறைகளை இக்குழு கவனத்தில் கொள்கிறது.

- தேவை ஏற்படின் அதில் திருத்தங்களைக் கொண்டுவர முற்படுகிறது.

- மக்களவைக்கான குழுவில் 15 உறுப்பினர்கள் உள்ளனர். மக்களவைத் தலைவர்தான் இக்குழுவின் தலைவர்

- மாநிலங்களவைக்கான குழுவில் 16 உறுப்பினர்கள் உள்ளனர். மாநிலங்களவைத் தலைவர்தான் இக்குழுவின் தலைவர்.

- தேவை ஏற்படின் அதில் திருத்தங்களைக் கொண்டுவர முற்படுகிறது.

- மக்களவைக்கான குழுவில் 15 உறுப்பினர்கள் உள்ளனர். மக்களவைத் தலைவர்தான் இக்குழுவின் தலைவர்

- மாநிலங்களவைக்கான குழுவில் 16 உறுப்பினர்கள் உள்ளனர். மாநிலங்களவைத் தலைவர்தான் இக்குழுவின் தலைவர்.

**3. தனி நபர் மசோதாக்கள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பான குழு (Committee on Private Member's Bills and Resolutions)**

- தனிநபர் மசோதாக்களை வகைப்படுத்தி. அம்மசோதாக்கள் விவாதிப்பதற்குத் தேவையான நேரத்தை ஒதுக்குகின்றது.

- மக்களவைக்கான குழுவில் 15 உறுப்பினர்கள் உள்ளனர். மக்களவையின் துணைத் தலைவர்தான் இக்குழுவின் தலைவர்

- மாநிலங்களவையில் இது போன்ற குழு ஏதும் இல்லை.

- மாநிலங்களவையில், இக்குழுவின் பணிகளை அலுவல் ஆலோசனைக் குழு செய்கின்றது.

**4. அவைக்கு வருகை புரியாத உறுப்பினர்கள் தொடர்பான குழு (Committee on Absence of Members)**

- அவைக்கு வருகை புரிய இயலாத உறுப்பினர்களின் விண்ணப்பங்களைப் பிரிசீலினை செய்கிறது.

- அதேபோல், முன் அனுமதியின்றி, அவைக்கு 60 நாட்களுக்கு மேல் வராத உறுப்பினர்கள் தொடர்பாக ஆராய்தல்.

- மக்களவைக்கான இக்குழுவில் 15 உறுப்பினர்கள் உள்ளனர்.

- மாநிலங்களவையில் இக்குழு இல்லை. இக்குழுவின் பணியை அவையே செய்கின்றது.

## 6. அவை பராமரிப்புக் குழுக்கள் (House – Keeping Committees)

### 1. பொது நோக்கத்திற்கான குழு (General Purpose Committee)

- அவை தொடர்பான விசயங்களில் ஆலோசனை வழங்குகிறது.

- ஒவ்வொரு அவையிலும், இக்குழுவில் அவைத் தலைவர், அனைத்து நிலைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கட்சித் தலைவர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

### 2. நூல் நிலையக் குழு (Library Committee)

- நாடாளுமன்ற நூல் நிலையம் தொடர்பான அனைத்து விசயங்களையும் இக்குழு கவனத்தில் கொள்கிறது.

- அனைத்து உறுப்பினர்களும் பயன்படுத்துவதற்கு ஏதுவாக உரிய வசதிகளை ஏற்படுத்தித் தருகின்றது.

### 3. உறுப்பினர்களின் ஊதியம் மற்றும் இதரச் சலுகைகள் தொடர்பான இணைக் குழு (Joint Committee on Salaries and Allowance of Members)

- நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஊதியம் மற்றும் ஓய்வூதியச் சட்டம் 1954-ன் படி இக்குழு ஏற்படுத்தப்பட்டது.

- உறுப்பினர்களுக்கு ஊதியம். சலுகைகள் மற்றும் ஓய்வூதியம் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்கின்றது.

### 4. அவைக் குழு (House Committee)

- இக்குழு, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவை மற்றும் - விடுதியில் உணவு, மருத்துவம் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருகின்றது.
- அதேபோல் உறுப்பினர்களுக்கு வீடுகளை ஒதுக்கீடு செய்து தருகின்றது.
- ஒவ்வொரு அவைக்கும் தனித்தனிக் குழுக்கள் உண்டு.
- மக்கள் அவைக்கான குழுவில் 12 உறுப்பினர்கள் உள்ளனர்.

## ஐஐ. தற்காலிகக் குழுக்கள் (Ad Hoc Committees)

- தற்காலிகக் குழுக்கள் இரு வகைப்படும்.
  1. விசாரணைக் குழு 2. ஆலோசனைக் குழு

1. **விசாரணைக் குழு**
    - ஒரு குறிப்பிட்ட பெருளைப்பற்றி விசாரித்து அவைக்கு அறிக்கை அளிப்பது இக்குழுவின் நோக்கமாகும்.

2. **ஆலோசனைக் குழு**
    - ஒரு குறிப்பிட்ட மசோதாவைப்பற்றி ஆராய்ந்து அவைக்கு அறிக்கை அளிப்பது இக்குழுவின் நோக்கமாகும்.

APPOLO STUDY CENTRE